

# திருக்கோயில்




டிசம்பர்
1999

விலை
ரூபாய் ஐந்து



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் புதிய கட்டிடத் திருப்பணிகள் திறப்புவிழா மற்றும் தொடக்க விழா மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திருமிகு ஐ. பெரியசாமி அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தொடங்கி வைக்க மிகச் சிறப்பாக நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியாளர் திருமிகு ஏ.எஸ். ஜீவரத்தினம், இ.ஆ.ப., பழநி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு த. பூவேந்தன் ஆகியோரும் பங்குபெற்று வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்கள். இவ்விழாவில் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திருமிகு கே.சி. பழநிசாமி அவர்கள், அறங்காவலர் பெருமக்கள் மற்றும் இணை ஆணையாளர் - நிர்வாக அதிகாரி திருமிகு கு. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., அவர்கள் கலந்து கொண்டார்கள்.



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 41 | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரமாதி ஆண்டு மார்கழி டிசம்பர் 1999 | மணி 12 |



## சிறப்பாசிரியர்

திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி

## ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


## முகப்பு

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலும்,
திருக்குளமும்

## பொருளடக்கம்


*சிவஞான போதத்தில் ஆன்ம ஞானம்*
- முனைவர் சி. அருணைவடிவேலு அவர்கள்

*திருவண்ணாமலை உணர்த்தும் தத்துவம்*
- திருமதி பட்டம்மாள் ஆனந்தா

*''திருத்தொண்டத் தொகை'' - தோற்றமும் ஏற்றமும்*
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

*பெறுதற்கரிய பிறவியின் பயன் யாது?*
- நிறைமதி

*பிரார்த்தனை*
- மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

*பெரியபுராணம் புதுமையும் பொதுமையும் செய்த காவியம்*
- அருட்கதை நம்பி புலவர் கோ. சாரங்கபாணி

*கார்த்திகைப் பெருமான்*
- திருமதி இரா. பத்மாவதி

*கம்பரின் இராமாவதாரம்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*ஸ்ரீ சாரதா புஜங்கம்*
- ஸ்ரீ பாரதி தீர்த்ததாசன்

*ஓம் முருகா என்று சொன்னேன்*
- செவ்வேள்

*ஸ்ரீ துளசி திருமணம்*
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# சிவஞான போதத்தில் ஆன்ம ஞானம்

- சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்,
முனைவர் சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்

## திருமுறை சாத்திரங்கள்

சைவ சமயத்தின் இரு கண்களாகத் திகழ்வன **பன்னிரு திருமுறைகளும், பதிநான்கு சாத்திரங்களும்.**

**திருமுறைகள் அன்பை வளர்ப்பன; சாத்திரங்கள் அறிவை வளர்ப்பன.** எனினும், அறிவு வழிப்பட்ட அன்பே மெய்யன்பாம்; நிலையான அன்பாம். அறிவு வழிப்படாத அன்பு ஒருகால் தோன்றினும், அது நிலை பெறாது. இதனைத் துறை மங்கலம் **சிவப்பிரகாச அடிகள்** தமது **'நன்னெறி'** நூலில் பின்வருமாறு விளக்கினார்.

பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே;
காழ்ஒன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ?
தாழ்ஒன் றிலதாயின் தான்.

## சிவஞான போதம்

சாத்திரங்கள் பதினான்காயினும் அவற்றுள் தலையாயது **மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவ ஞான போதமே.** அஃதே மெய்ந்நெறிப் பொருளை அளவை முறையில் நுணுகி ஆராய்ந்து, ஐயந்திரிபற விளக்குவது. ஆயினும், அஃது அதே நிலையில் விரிந்த நூலாக இல்லாமல் மிகச் சுருக்கமாய்ப் பன்னிரண்டே நூற்பாக்களால் அமைந்து விளங்குதல் வியப்பைத் தருகின்றது.

நூல்கள் பலவும் அவை தோன்றியபின் தோன்றும் உரைகளால் தம் பொருள்கள் ஒருதலைப் படாது, பல தலைப்பட்டு ஐயம் விளைத்தல் தமிழிலும் காணப்படுவதே. இதற்குத் திருக்குறளின் பழைய, புதிய உரைகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். வடமொழியில் பிரமசூத்திரத்தின் பாடியங்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

மெய்கண்ட தேவர் தமது நூற்கு ஒன்றோடொன்று மாறுபடும் உரைகள் தோன்றாத படி, தாமே தம் நூற்பொருளை ஒரு தலைப்பட விளக்கி, **'வார்த்திகம்'** என்னும் சிறிய உரையையும் செய்தார். ஆகவே, வார்த்திகத்தையும் சேர்த்தே **'சிவஞான போதம்'** எனச் சொல்லப்படுகின்றது.

## தோற்றுவாய்

மெய்கண்டார் தாமே தம் நூலுக்குப் பாயிரமாக இருசெய்யுட்களை முதற்கண் செய்துள்ளார். நூலாசிரியர்தாமே செய்தமையால் அவை **தற்சிறப்புப் பாயிரமாம்.** முதற்செய்யுள் **கடவுள் வாழ்த்து.** இரண்டாம் செய்யுள் **அவையடக்கம்.** இவற்றுள் அவையடக்கச் செய்யுளால் **மெய்கண்டார்** தம் நூற்பொருளுக்குத் **தோற்றுவாய் செய்துள்ளார்.** தற்சிறப்புப் பாயிரத்திற்கு அவர் உரைசெய்யவில்லை; நூற்கு மட்டுமே உரை செய்தார்.

அவையடக்கம் வெண்பாவாய் அமைந்துள்ளது.

தம்மை உணர்ந்து, தமையுடைய தன் உணர்வார்
எம்மை உடைமை எமை இகழார்; - தம்மை
உணரார் உணரார்; உடந்தியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

**'உணர்வு'**, அல்லது **'அறிவு'** - என்பதே வடமொழியில் **'ஞானம்'** எனப்படுகின்றது. எனவே, **''உணர்வார்''** என்றது, **'ஞானச் செய்திகளை உடையவர்கள்'** என்றவாறாம்.

**''தம்மை உணர்ந்து, தமை உடைய தன் உணர்வார்''** என்றமையால், ''பொருள்களை உற்றவாறு உணர முயல்வோர் யாவரும் முதற்கண் தம்மைத் தாம் உணர்தல் வேண்டும்'' என்றார். உணர முயல்வோர் அனைவரையும் குறித்து, **''தம்மை உணர்ந்து''** எனப் பன்மையாற்கூறிய ஆசிரியர், பின்பு, **''தமையுடைய தன் உணர்வார்''** - எனத் தம்மை உடையானை ஒருமையாற் கூறினார்.

''தமை உடைய'' - என்பதற்கு, **'தம்மை ஆளாக உடைய'** என்பது பொருள். எனவே, 'அடியார்களாகிய உயிர்கள் எண்ணில' என்பதும், அவைகளை ஆளாக உடைய ஆண்டவன் ஒருவன் என்பதும் விளங்கின.

## தமிழகத்தின் பெருமை

உலகத்தில் இருக்கிற கோயில்களில் பாதிக்குமேல் இந்தியாவில்தான் இருக்கின்றன. இதிலும் பாதிக்கு மேற்பட்ட ஆலயங்கள் தமிழ் நாட்டில் தான் இருக்கின்றன.

உலகத்தில் இருக்கின்ற சாஸ்திரங்களில், பக்தி நூல்களில் பாதிக்குமேல் இந்தியாவில் தான் இருக்கின்றன. இதிலும் பாதிக்கு மேற் பட்ட நூல்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவையே.

- ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகளின் ''தெய்வத்தின் குரல்'' நூலிலிருந்து

உடம்பொடு கூடி வாழும் உயிர்கள் பல இனத்தனவாகும். அவற்றுள் மக்கள் இனமே சிறப் புடையது. அதனால் அறிய வேண்டுவனவற்றை அறிபவர் மக்களே. ''அவர்கள் அறியப்புகுங்கால், முதற்கண் தம்மியல்பைத் தாம் உள்ளவாறு உணர்தல் வேண்டும்.'' என்றார். ''தம்மை உணர்தல்'' என்றதை, ஒவ்வோர் உயிரையும் தனித்து வைத்துக் கூறினால், **'தன்னை அறிதல்'** எனக் கூறல் வேண்டும். தன்னை அறிதலே, **ஆன்ம ஞானமாம்.**

ஒவ்வொருவனும் தன்னியல்பைத் தான் அறி யாது, பிற பொருள்களின் இயல்பை அறியப்புகு வது, நகை விளைப்பதாய் முடியும்.

''தன்னுயிர் தான்அறப் பெற்றானை, ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்'' - குறள் 268

எனத் திருவள்ளுவரும் ஆன்ம ஞானத்தின் சிறப்பைக் கூறினார்.

''தன்னை அறிவது அறிவாம்; அஃ தன்றிப்
பின்னை அறிவது பேயறி வாமே''

என்பது திருமூலர் வாக்கு. *(திருமந்திரம் - 2318)*

### தன்னை அறியுமாறு

'உயிர் தன்னை உள்ளவாறு அறியுமாயின் உடையானைப் பற்றிய அறிவு தானே உண்டாகும்' என்பது **மெய்கண்டார் கருத்து.** உயிர் தன்னை அறியுமாற்றை மெய்கண்டார் சிவஞான போதத்தில் மூன்று, நான்கு, ஐந்து, ஏழாம் நூற்பாக்களில் கூறினார்.

### மூன்றாம் நூற்பா - வார்த்திகம்

''நான் ஆர்! என் உள்ளம் ஆர்!'' என்ற திருவாசகத்தின்படி ஒவ்வொருவனும் **'நான் யார்'** என ஆராய்ந்து தெளிதலே முதற்கண் வேண்டப்படும் ஆனம்ஞானமாகும். அங்ஙனம் ஆராயும் பொழுது ஆராய்பவன், - 'நான் யார் என ஆராயும் அறிவு தனக்கு இருப்பதால், நான் அறிவுடைப் பொருள்' என்பதை முதற்கண் துணிதல் வேண்டும். ஒவ்வொருவனும் இயல்பாகத் தன் உடம்பையும், அதன் புறமும், அக மும் ஆகிய இடங்களில் உள்ள கருவிகளையுமே 'தான்' என எண்ணியிருத்தலால், அவைகளை ஆராயு மிடத்து, அவற்றுள் ஒன்றேனும் அறிவுடையதாய்த் தோன்றாமையால், ''நான் எனத் துணியப்படத்தக்க ஒருபொருள் இல்லை போலும்'' என்னும் மயக்கமே முதற்கண் உண்டாகும்.

### 1. தான் இல்பொருள் ஆகாமை

**அம்மயக்கத்தை மெய்கண்டார்**

''அன்று அன்று என நின்று அனைத்தும்
விட்டு அஞ்செழுத்தாய்
நின்றொன் றுளது; அதுவே நீ''

என்பதனால் நீக்கினார். அஃதாவது, ஒவ்வொன்றை யும் சுட்டி, **'இது நானல்லேன், இது நான் அல்லேன்'** எனக் கழித்து வந்து, 'நான் இல்லைபோலும்' என மயங்குகின்ற அறிவு உள்ளதுதானே? அந்த அறிவை உடைய பொருளையே - நான் - எனக் கொள்க என்றார்.

இதனால், 'உயிர்' எனப்படுவது முயற் கொம்பு, ஆகாயத் தாமரை முதலியனபோல இல் பொருளன்று; உள்பொருளேயாம்' என்னும் துணிவு பிறக்கும்.

### 2. பருவுடம்பு தான் ஆகாமை

''இது நானல்லேன்; இது நானல்லேன்'' எனக் கழித்து வந்த அறிவை யானோ, பிறரோ என் உடம் பைத் தள்ளித் தனியாகக் காண வாராமையால், இவ்வுடம்புதான் நான்போலும்'' என்னும் மயக்கம் மேற்கண்ட துணிவுக்குப்பின் உண்டாகும். அதனை **மெய்கண்டார்,**

**''என் பதி, என் மனை - என்பதைப் போல, என் கை என் கால் - என நிற்பது உளது ஆகலின், அதுவே அவ் ஆன்மாவாம்''** - எனக் கூறி நீக்கினார். அஃதா வது, - ''நான் பருத்தேன், நான் இளைத்தேன்- என்பதைப்போல வழங்குதல் உண்டாயினும், அதற்கு மாறாக என் கை, என் கால் முதலியனவாகவே யாவரும் வழங்குதல் அல்லது 'யான் கை, யான் கால் யான் உடம்பு' - என்பதைப் போல ஒருவரும் வழங்கு தல் இன்மையால், அவ்வழக்கு, மனைவி தன் கண வனை 'என்பதி' எனவும், கணவன் தன் மனைவியை 'என் மனைவி' எனவும் கூறுதல் போல்வதுதான். அதனால், கணவனும், மனைவியும் தம்முள் வேறா யினாற் போல, உடம்பும், உயிரும் வேறு வேறே யாம் - என்ற படி.

இதனால், **'பருவுடம்பு நான் அல்லேன்'** என்னும் துணிவு பிறக்கும்.

## 3. ஐம்பொறிகள் தான் ஆகாமை

அத் துணிவுக்குப் பின், ''உடம்பு அறிவுடைய தன்று. அதனால் அது நான் அல்லேன். உடற்கண் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி - என்னும் பொறிகள் புலன்களை அறிதலால், அவைதான் நான் போலும்'' என்னும் மயக்கம் உண்டாகும். அம் மயக்கத்தை **மெய்கண்டார்,**

**''ஐம்புலனாகிய சத்தம் பரிச ரூப ரச கந்தங் களை இந்திரியங்கள் ஒன்றறிந்தது ஒன்று அறியா மையின் இவ் ஐந்தினானும் ஐம்பயனும் அறிவது உளது ஆகலின், அதுவே அவ்வான்மாவாம்'' - எனக் கூறி நீக்கினார்.**

அஃதாவது, ஐம்பொறிகளில் ஒவ்வொன்று ஐம்புலன்களில் ஒவ்வொன்றையே அறியுமன்றி, ஐந்தையும் அந்தப் பொறியும் அறியாது. உயிர் ஐம் புலன்களையும் அறிதல் அனுபவத்தில் காணப் படுவது

''கண்டுகேட்டு, உண்டு, உயிர்த்து உற்று
அறியும் ஐம்புலனும்,
ஒண்டொடி கண்ணே உள''

என்பது திருக்குறள் *(1101)*

ஆகவே, 'ஒவ்வொன்றையே அறியும் பொறி களை ஐந்தையும் அறிவும் உயிராகக் கூறுதல் பிழை' என்பதாம். இதனால், **'ஐம்பொறிகள் நான் அல் லேன்'** என்னும் துணிவு பிறக்கும்.

## 4. நுண்ணுடம்பு தான் ஆகாமை

'ஐம்பொறிகள் நான் அல்லேன்' - எனத் துணிந்த பின்பும் ஐயம் நிகழ வாய்ப்பு உள்ளது.

அஃதாவது, நனவு நிலை நீங்கிக் கனவு நிலை உண்டான பொழுது, பருவுடம்பும், ஐம்பொறிகளும் செயலற்றுக் கிடக்கவும் கனவில் பல காட்சிகளை உணர்தல் நிகழ்கின்றது. எனவே, உடம்பின்றிக் காட்சி நிகழாது ஆதலின், 'பருவுடம்பிற்கு வேறாய் நுண்ணுடம்பு உண்டு' - என்பது அறியப்படுகின்றது. அதுவே நனவு நிலையிலும் பருவுடம்பில் நின்று பொருள்களை அறியும் ஆதலின் நுண்ணுடம்பே உயிராகலாம். அதனால், **'நுண்ணுடம்பே நான் போலும்'** என்னும் மயக்கம் உண்டாதல் கூடும். அதனை **மெய்கண்டார்,**

**''நனவின்கண், 'கனவு கண்டாம்' என் றும், 'கண்டிலம்' என்றும் நிற்பது உளது ஆகலின், அதுவே அவ் ஆன்மாவாம்''** எனக் கூறி நீக்கினார்.

அஃதாவது, கனவு கண்டு விழித்தபின், கனவுக் காட்சி கனவிற் கண்டதுபோலவே சிறிதும் மாற்றம் இன்றி நனவில் வரப்படுதல் இல்லை. அரைகுறையாகவே உணரப்படும். சில வேளைகளில் 'நாம் இன்று கனவு கண்டோமா? இல்லையா?' என்று கூட ஐயம் தோன்றிவிடும். கனவில் செயற்படும் நுண்ணுடம்பே நனவிலும் அக்காட்சியை நினைவு கூர்வதாயின் முன் கண்டவாறே உணருதல் வேண்டு மன்றி, மயங்கி உணர்தல் கூடாது. ஏனெனில், நேற்று நிகழ்ந்தவைகளை இன்று நாம் அவ்வாறே உணர்தல் அன்றி அவை பற்றிச் சிறிதும் ஐயம் கொள்ளுதல் இல்லை. ஐயம் கொள்வதாயின் வாழ்க்கையே நடைபெறாது. அதனால், பருவுடம்பு நுண்ணுடம்பு கட்கு வேறாய ஓர் அறிவு ஒவ்வொரு நிலையில் ஒவ்வோர் உடம்பைப் பற்றி நின்று பொருள்களை அறிந்து வருதல் அறியப்படும். ஆகவே, 'நுண் ணுடம்பு உயிரன்று' என்பதாம். இதனால், 'நுண் ணுடம் நான் அல்லேன்' என்னும் துணிவு பிறக்கும்.

## 5. பிராணன் தான் ஆகாமை

இனி மேற்கூறிய துணிவிற்குப் பின், ''பரு வுடம்பும்'', நுண்ணுடம்பும் நனவு கனவுகளில் செயற் படுதல் அன்றி, கனவைக் கடந்த உறக்கத்தில் அவை செயற்படுதல் இல்லை; ஆயினும் **பிராணன்** (மூச்சுக் காற்று) எந்நிலையிலும் செயற்படுகின்றது. மேலும் மூச்சு உள்ள பொழுது உயிர் உள்ளதாகவும், அஃது இல்லாத பொழுது உயிர் நீங்கியதாகவும் கருதப்படு கின்றன. அதனால், பிராணனே உயிராகலாம். அத

அதனால் ''பிராணனே நான்போலும்'' என்னும் மயக்கம் உண்டாகலாம். அதனை மெய்கண்டார்,

''ஒடுங்கினவிடத்து இன்பத் துன்பம், சீவனம் பிரகிருதிக்கு இன்மையின், ஒடுங்காதவிடத்து இன்பத் துன்பம், சீவியாநிற்பது உளதாகலின் அதுவே அவ் வான்மாவாம்'' எனக் கூறி நீக்கினார்.

அஃதாவது, (ஒடுங்கினவிடம், ஒடுங்காதவிடம் - என்பன கருவிகள் பல ஒடுங்கின உறக்கத்தையும், யாதொரு கருவியும் ஒடுங்காத விழிப்பு நிலையையும் குறித்தன. பருவுடம்பை, 'பிரகிருதி' என்றார்.

கருவிகள் பல ஒடுங்கிய நிலையிலும் மூச்சுக் காற்றுக் கேடின்றி இயங்கவும் பருவுடற் கருவிகளைக் கொண்டு நுகரப்படும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்ற நுகர்ச்சிகள் நிகழாமையானும், பருவுடம்பும், ''துஞ்சி னார் செத்தாரின் வேறல்லர்'' எனத் திருவள்ளுவர் கூறிய படி அசைவற்றுக் கிடத்தலானும், கருவிகள் ஒடுங்காத விழிப்பு நிலையில் ஐம்புல நுகர்ச்சியும், பருவுடம்பு பல செயற்பாடுகளை உடைத்தாலும் காணப்படுதலால், (பிராணன் உயிராயின் அது நன்கு இயங்கும்பொழுது கருவிகள் ஒடுங்குதல் பொருந்தாமையாலும் தான் ஓய்வு கொள்ளும் பொழுது கருவிகள் ஒடுங்கும் ஆதலாலும் பிராணன் உயிரன்று என்பதாம். 'உறக்கத்தில் உயிர் ஓய்வு கொள்ளுகின்றது' என்பதாம்.

இதனால், 'நான் பிராணன் அல்லேன்' என்னும் துணிவு பிறக்கும்.

**தங்க ரத வெள்ளோட்டம்**

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் தங்கரத வெள்ளோட்ட விழா 28.11.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதன் விளக்கக் கட்டுரையும் பாடல்களும் வரும் ஜனவரி புத்தாண்டு இதழில் இடம்பெறும்.

### 6. பரமான்மா சீவான்மா ஆகாமை

''மேல் பருவுடம்பு முதலியவாகச் சொல்லப் பட்டன எல்லாம் அறிவில் பொருள்கள் ஆதலின், அவைகள் உயிரல்ல'' என்பது உண்மையே. பிரமப் பொருள் (கடவுட் பொருள்) அறிவுடையது ஆகலானும், அதனின் வேறாக மற்றோர் அறிவுப் பொருள் உண்டு என்றால் மிகையாகலானும் பிரமப் பொருளே ஆன்மா. அவ்வுண்மையை மயக்கத்தால் ஆன்மா, - நான் யார் - என ஐயுற்று ஆராய்கின்றது'' என ஏகான்மவாதிகள் கூறுவர். அதனால், 'நான் யார்' என ஆராய்வார்க்கு 'பிரமமே நான் போலும்' என்னும் மயக்கம் உண் டாகும். அம்மயக்கத்தினை மெய்கண்டார்,

''அவன் அறிந்தாங் கறிவன் - என்று அறிவிக்க அறிந்து, உபதேசியாய் நிற்பது உளதாகலின், அதுவே அவ்வான்மாவாம்'' எனக் கூறி நீக்கினார்.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)

★ ★ ★

## பக்தியின் ஒன்பது நிலைகள்

பக்தியின் ஒன்பது செயற்பாடுகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | யாதனம் | - | கோயில்கள் எடுப்பித்தல், நந்தவனம் அமைத்தல் |
| 2. | சிரவணம் | - | இறைவனின் பெருமை கூறும் நூல்களைக் கேட்டல் |
| 3. | கீர்த்தனம் | - | இறைவனின் பெருமை கூறும் பாடல்களைப் பாடுதல் |
| 4. | அர்ச்சனம் | - | இறைவனைத் திருமஞ்சனம் ஆட்டிப் பூச்சூட்டி, நிவேதனம் படைத்துப் புசித்தல் |
| 5. | ஸ்துதி | - | இறைவனின் துதிப்பாடல்களைத் தனித்தும், பலருடனும் பாடுதல் |
| 6. | வசனம் | - | இறைவனின் மகிமைகளை விவரித்தல் |
| 7. | வந்தனம் | - | இறைவனை அஸ்டாங்கமாக - பஞ்சாங்கமாக வணங்குதல் |
| 8. | ஸ்மரணம் | - | இறைவனை எப்பொழுதும் மறவாமல் இருத்தல் |
| 9. | தியானம் | - | சுகாசனம் முதலிய நிலைகளில் தியானித்தல். |

# திருவண்ணாமலை உணர்த்தும் தத்துவம்

- திருமதி பட்டம்மாள் ஆனந்தா

அடிமுடி காணாத நிலை

''ஆதியும் அந்தமும் இல்லா
அரும் பெரும் ஜோதி''

என்று திருவெம்பாவையில் முதற் பாட்டாக மாணிக்க வாசக சுவாமிகள் அருளியுள்ளார். திருவெம்பாவையின் முடிவில் அப்பெருஞ் ஜோதி படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரிவதையும் குறிப்பிட்டுப் போற்றுகிறார்.

தன் மயமான தஹராகாசப் பொருள் அதுவே, விபூதி வாயிலாய் ஐந்தொழில் புரிகிறது. தோற்றம், போகம், ஈறு என்ற தொழிலோடு காணாமை (மறைத்தல்) தொழிலை மாலும், நான்முகனும் அடிமுடி தேடிய வரலாற்றால் குறிப்பிட்டுப்பின்பு உயிர்கள் உய்ய ஆட்கொண்டருளுகிறார்.

அகந்தையால் தன்மயப் பொருளை அறியாத சிருஷ்டி சக்தியும், திதி சக்தியும் தத்தம் பெருமையை விளக்கத்தான் தான் பெரிய பொருள் என்று எடுத்துக் காட்ட முயற்சித்தனர். அவர்களுக்கிடையில் மற்றொரு பெரிய பொருள் ஜோதிர்மயமாக விண்ணும், மண்ணுமளாவி நிற்க அதன் அடியையும் முடியையும் காண அயனும் (சிருஷ்டி சக்தியும்) அரியும் (திதி சக்தியும்) முயன்றனர்.

அதுவே தூலமான அசலமான அருணாசலம். இம்மலை எட்டுக் கோணங்களாய் அட்ட மூர்த்தி வடிவாக உள்ளது. அட்ட திக்குகளுக்கும் அதிபதியான இந்திர லிங்கம், அக்னிலிங்கம், எமலிங்கம், நிருதிலிங்கம், வருணலிங்கம், வாயுலிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் என்று முறையே கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்று அட்டலிங்கமும் விளங்குகிறது. கிரிவலத்தில் ஆதி அருணாசல பஞ்சமுக தரிசனமும் காண்கிறோம்.

அரியும் அயனும் அடிமுடி காண விஸ்வரூபம் எடுத்த இடம் அடி அண்ணாமலை. தற்கால மானிடரே சந்திர மண்டலத்தை எட்டும் பொழுது அரியாலும், அயனாலும் அடி முடி காண முடியவில்லை என்பது வியப்பிற்குரியது. அரி பன்றி உருவெடுத்துப் பாதாளமெங்கும் சென்று பார்த்துத் திருவடியைக் காணாது திரும்ப, அயனோ அஜபா மந்திரமென்னும் அன்னத்திலேறி ஆக்ஞா சக்கரத் திற்குயர்ந்து மகேஸ்வரனின் ஜடாமுடியிலிருந்த தாழம் பூவைப் பார்த்துத் திரும்பி, காணாததைக் கண்டேன் என்று பொய்யுரைத்து அதற்குண்டான தண்டனையும் பெற்றது. நான் என்னும் அகங்காரத்தினால் மகேஸ்வர ரிடமிருந்து தோன்றிய லிங்கோற்பவரை இருவராலும் காணமுடியவில்லை. இதன் வேதாந்த பூர்வமான பொருளை ஆராய்வோமாக.

பரம் பொருள் அருவத்திருமேனி, உருவத்திருமேனி, அருவுருவத் திருமேனி என்று மூன்று வகையான திருமேனியை உடையது. இவற்றுள் தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட சிவபெருமானே அவ்யக்த லிங்கம். வியக்தலிங்கம் மகேஸ்வர மூர்த்தத்தினின்றும் தோன்றிய இருபத்தைந்து திருமேனி. அருவுருவத்திரு மேனி ஆலயங்களில் உள்ள லிங்க வடிவமான சதாசிவத் திருமேனி. மெய்ப் பொருள் ஒன்றே. அப் பரம்பொருள் உருவம் உடையதாகவும், உருவத்தைக் கடந்த நிலையிலும் உள்ளது. சகுணப்பிரம்மமாகவும், நிர்க்குண பிரும்மமாகவும் உள்ளது. சகுணபிரம்மத்தில் வெவ்வேறு அம்சங்களை உடைய தெய்வமாக அமைந்து அவரவர்க்குரிய வடிவத்தை எடுத்துக்கொள்கின்றனர். வடிவம் படைத்த பகுதி வடிவத்திற்கப்பாலுள்ள அகண்ட வஸ்துவை முழுதும் அறிந்து கொள்ள முடியாது.

நான் (அகங்காரம்) எனது (மமகாரம்) என்ற அகங்காரங்கள் போய் நிர்மலமான மனதால் அவனைக் காணலாம். இதனையே 'ஸ்மரணாத் அருணாசலம்', நினைத்த மாத்திரத்தில் முக்தி என்று ஆன்றோர் கூறுகின்றனர். உருவென்வும் அருவெனவும், உளதெனவும், ஒன்றாயும் வேறாயும், உடனாயும், விண்ணாகி, மண்ணாகி கண்ணார் அமுதமாய் நின்றானை எப்படி அறிய முடியும்.

இதனையே திருமந்திரம்

விளக்கினைப் பிளந்து விளக்கினையேற்றி
விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடையான் கழல் மேவலுமாமே

என்று விளக்குகிறது.

## கற்கோயில்களும் சொற்கோயில்களும்

கற்கோயில்களுக்குச் சென்று வழிபடுவதனால் கடவுள்உணர்ச்சி உள்ளத்தில் முளைவிடுகின்றது. அருளாளர்கள் அருளியுள்ள சொற்கோயில்களாகிய அருள்நூல்களைப் படித்தும், படிந்தும் பழகினால் அவ்விறைவுணர்ச்சி மேலும் மேலும் பெருகி, முளைசெடியாகிறது. பிறகு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிகளில் ஏறினால் செடி அரும்பி மலர்ந்து காய்த்துக் கனியைத் தருகின்றது.

- செந்தமிழ்ச்செல்வர் கி.வா.ஜெகந்நாதன்

மேலும் அப்பரடிகளும்

உடம்பு எனும் மனை அகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர் நெய் அட்டி
உயிர் எனும் திரிமயமாக்கி
இடம் படு ஞானத்தீயால்
எரி கொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே என்றுரைக்கிறார்.

இதனையே ஔவைப் பிராட்டியாரும்

சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி

என்று ஓசையாகிய புற உலகத்தில் சதாசிவத்தினையும், மனமாகிய அக உலகத்தில் சிவலிங்கத்தையும் காண அருள்பாலிக்கும்படி விநாயகர் அகவலிலே கூறுகிறார்.

சரீரம் என்னும் ஆலயத்தில், பற்றற்ற உள்ளம் ஆகிய விளக்கில், தியானம் என்ற நெய்விட்டு, பேருணர்வு என்ற திரியிட்டு அறியாமை, ஆணவம் அழிந்து ஒளி வீசும் ஞானச்சுடரே தீபம். இத்தீபத்தை உள்ளத்தில் தானாகக் காண்பதுவே தீப தரிசனம். முற்றும் சுடர் எரிந்து ஈஸ்வர சொரூபத்தில் மீதமின்றிக் கலப்பதுவே கற்பூர தரிசனம். அதன் தூலமான, அசலமான ஜோதி வடிவாயிலங்கும் தன்மையின் பெருமையுணர்ந்து வலம் வருதலே கிரி வலம். அருணாசலத்தை அறிய நடையெல்லாம் பிரதட் சிணமாக, பேச்செல்லாம் ஜபமாக, நினைப்பெல்லாம் ஈஸ்வரதியானமாக, துயில்வதெல்லாம் சமாதியாக சகல மும் சிவார்ப்பணமாகச் செய்தல் வேண்டும்.

ஆதி சங்கர பகவத்பாதரும் சிவமானஸ பூஜையில்

ஆத்மாத்வம் கிரிஜாமதி : ஸஹசராப்ராணா:
சரீரம்க்ருஹம்
பூஜா தே விஷயோப போக ஈசனா நித்ரா ஸமாதிஸ்திதி:
ஸஞ்சார : பதயோ : பிரதட்சிண விதி: ஸ்தோத்ராணி
ஸர்வாகிரோ
யத்யத்கர்ம கரோமி தத்ததகிலம சம்போ தவாராதனம்

என்று அருளி இருக்கிறார்.

துள்ளு மறியாம் மனது பலி கொடுத்தேன் கர்ம
துட்ட தேவதைகளில்லை
துரிய நிறை சாந்த தேவதையா முனக்கே
தொழும்பன் அன்பபிஷேகநீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத்தியம்
பிராணன் ஓங்குமதி தூபதீபம்
ஒரு காலமன்றிது சதாகால பூஜையாய்
ஒப்பு வித்தேன் கருணை கூர்

என்று தாயுமானசுவாமிகளும் அருளியுள்ளார்.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீர் ஆடே லோர் எம்பாவாய்!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

திருச்சிற்றம்பலம்

★★★

# "திருத்தொண்டத் தொகை" – தோற்றமும் ஏற்றமும்

– பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D. Litt., Ph.D.,

இறைவன் திருத்தலங்களில் திருவாரூர் மிகவும் தொன்மையானது. பிறக்க முத்தியளிக்கும் இத்தலத்தின் தொன்மையைத் திருநாவுக்கரசரின் தாண்டகம் வெகுவாகப் புகழ்கின்றது. ''ஒருவனாய் உலகத்தே நின்ற நாளோ'' என்று தொடங்கும் தம் பதிகத்துள் ''உலகில் இறைவன் தனியாக இருந்த ஒடுக்கக் காலத்திலேயே திருவாரூரில் கோயில் கொண்டு விட்டான்'' எனக் கூறுகிறார்.

திருவாரூர்த் திருக்கோயிலின் முன் அமைந்துள்ள கமலாலயத் திருக்குளத்தின் கரைகளில்தான் உலகின் முதல் ஒருவழிப் போக்குவரத்து முறை தொடங்கியிருக்க வேண்டும். குடவாசல் திசையிலிருந்து திருவாரூர் நகருக்குள் நுழையும் ஊர்திகள் அனைத்தும் கமலாலயக் குளத்தின் வடக்குக்கரை மற்றும் கிழக்குக்கரை வழியாகச் செல்கின்றன. திருவாரூரிலிருந்து குடவாசல் திசையில் செல்லும் ஊர்திகள் தெற்கு மற்றும் மேற்குக் கரைகளின் வழியே செல்கின்றன. மோட்டார் வாகனங்கள் தோன்றுவதற்கு முன்பே இங்கு ஒரு வழிப் போக்குவரத்து தோன்றிவிட்டது! ''வலமாகச் செல்ல வேண்டும்'' என்ற மரபையொட்டி இம்முறை தோன்றியிருக்கலாம் எனினும், ஆரூரின் தொன்மைக்கு இது ஒரு நவீன எடுத்துக்காட்டு.

ஆரூர் பெருமானின் அருளால் சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்ற உயர்நிலை பெற்றார். அவர் திருக்கோயிலில் கண்ட பரவையாரையும் திருமணம் செய்து கொண்டு இல்லற யோகியாக இறைத்தொண்டு புரிந்து வந்தார்.

திருவாரூர் கோயிலில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில் பழ அடியார் பலரும் குழுமியிருக்கக் கண்டார் சுந்தரர். ஓடும் செம்பொன்னும் ஒன்றெனக் கருதி வீடும் வேண்டாத விறலின் நின்ற அப்பெருமக்களுக்குத் தாம் அடியனாக ஆகும் நாள் எந்நாளோ என ஏங்கியிருந்த சுந்தரர் முன் புற்றிடங்கொண்ட பெருமான் தோன்றினார். திருத்தொண்டர்களின் பெருமையைத் தமது திருவாக்கால் இறைவர் எடுத்தோதினார்.

"பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப்
பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்; ஊனமேல் ஒன்றும்
இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால்
இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்; இவரை நீ அடைவாய்'' என்று

ஈசன் திருவாய் மலர்ந்தருளினான். செய்தற்கரிய செய்த அவர்கள்தம் பெருமையைப் பார்த்திடில் அவர்கள் (அடியார்கள்) தமக்குத் தாமே ஒப்பாவார்கள். அதாவது அவர்களின் பெருமைக்கு வேறு எவரும் ஈடாக மாட்டார்கள். இடையறாத தியானத்தினால் இறைவனையே தமது உருவாகக் கொண்டவர்கள். ஒன்றியிருந்து நினைக்கும் உயர்வினால் உலகையும் வென்றவர்கள். பிறப்பு, இறப்பு என்னும் இரண்டையும் கடந்த நிலையில் இருப்பவர்கள். உயிர்களிடத்தில் அன்பு செய்வதால் இன்பம் துய்க்கும் இயல்பினர்.

அடியார் பெருமையை இவ்வாறு இறைவன் விளக்கினார். தன்னை வணங்கி நின்ற சுந்தரரை ஈசன் ''நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்து நீ நிறை சொல் மாலை கோதிலா வாய்மையாலே பாடு'' எனப் பணித்தான்.

''இவர்கள் பெருமையை யான் எப்படிப் பாடுவேன்? நீரே பணித்தருள் செய்க'' என சுந்தரர் ஈசனிடம் வேண்டினார். அவரும் :-

''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார். நம்பியாரூரர் உளம் மகிழ்ந்தார். திருக்கூட்டத்தைப் பொதுவாக முதலில் வணங்கினார். பின்பு, அன்பு மேலிட அவர்களைத் தனியே வணங்கி 'அடியேன்' எனக் கூறிப் பணிந்தார்.

திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த அடியார்கள் மட்டுமின்றி வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தொண்டு புரிந்த அடியார்களைப் பற்றிய செய்திகளை இறைவர் சுந்தரர்க்கு உணர்த்தினார். அவரருளால் பெற்ற 'பதிஞானம்' என்ற இறைப் பேரறிவு கொண்டு திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார்.

கொல்லிக் கௌவாணம் என்ற பண்ணில் அமைந்த திருத்தொண்டத் தொகையில் பதினோரு பாடல்கள் உள்ளன.

திருஞான சம்பந்தரின் காலத்துக்கு முற்பட்டவர்கள் ஒன்பதின்மர். திருஞான சம்பந்தரின் காலத்தில் வாழ்ந்தவர்கள் பன்னிருவர். சுந்தரரின் காலத்தில் இருந்தவர்கள் பதின்மூவர். இன்ன காலமென்று தெளிவாகக் கூறமுடியாத காலத்தவர்கள் இருபத்தொன்பதின்மர். ஆக, அறுபத்து மூவரையும், மற்றும் ஒன்பது தொகையடியார் கூட்டங்களையும் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார்.

எதனையும் எதிர்பார்க்காத, தன்னலமற்ற தொண்டு புரிந்த அடியார்களை உலகுக்கு அறிமுகப் படுத்த, அவர்களை நிலைத்து வாழச் செய்ய இறைவன் திருவுள்ளம் கொண்டு, அதனை, சுந்தரர் வழியே செயற்படுத்தினார்.

'தொகை' என்றால் தொகுத்துக் கூறியது என்று பொருள். தற்காலத்தில் 'செய்தித் தொகுப்பு' 'மத்தியத் தொகுப்பு' என்றெல்லாம் வழங்குகின்றனர். பல்வேறு இடங்களிலிருந்து திரட்டப்பட்டவற்றைத் தொகுப்பு என்று கூறுகின்றனர். 'தொகுப்பு' என்பதே முற்காலத்தில் 'தொகை' என வழங்கப்பட்டது. கலித்தொகை, குறுந்தொகை என்பன சில எடுத்துக்காட்டுகள்.

பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களில் வாழ்ந்திருந்த அரனடியார்களைப் பற்றிய செய்திகளின் தொகுப்பே 'திருத்தொண்டத் தொகை' எனப்பட்டது. சில சொற்களிலேயே, சிவனடியார்களின் சிறப்புகள் இதனுள் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன.

திருத்தொண்டத் தொகையும், அதன் பின், நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியுமே சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது.

அடியார்களை அறிமுகப்படுத்த இறைவரே அடியெடுத்துக் கொடுத்தார். அத்துடன் மேலும் ஒரு தனிச்சிறப்பு இதற்கு உண்டு; இறைவர் தம்மைப் பாட சுந்தரர்க்கு 'பித்தா' என்ற சொல்லையே கொடுத்தார். தம்மடியார்களைப்பாட ''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று ஒரு சொற்றொடரையே முதலாகக் கொடுத்தார்!

தம்பிரானாகிய இறைவர் ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்றார். தம்பிரான் தோழர் ''திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்'' என்று தொடர்ந்தார். இறை நெறியில் மறையோதும் அந்தணரும், மண்பாண்டம் செய்யும் தொழிலாளியும் ஒன்றே என்ற சமுதாயச் சமத்துவத்தைத் திருத்தொண்டத் தொகையின் தொடக்கத்திலேயே காண்கிறோம்.

திருவாரூர் பிருதிவித்தலம். மண்தலம் தொடங்கி விண்தலம் வரை விரிந்து பரவியுள்ளது அடியவர்தம் பெருமை. அஃது திருவாரூரில் (மண்தலத்தில்) அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு திருத்தொண்டத் தொகையாய் மலர்ந்தது. விண்தலம் (ஆகாயத் தலம்) ஆகிய தில்லையில் திருத்தொண்டர் புராணமாகப் பின்னர் விரிவடைந்தது. அங்கு ஈசன் ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார் அல்லவா? இது ஓர் அற்புத நிகழ்ச்சி.

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் ஈற்றடியும் ''ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!'' என்று நிறைவடைகிறது.

''திருவாரூர்தியாகேசப் பெருமானுக்கு ஆளாகிய நம்பி ஆரூரன் ஆகிய யான் தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்பது போல் ஒவ்வொரு அடியாருடனும் இயைத்தும் பொருள் கொள்ள வேண்டும்.

''ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்'' என்று சிவஞான சித்தியார் உரைக்கிறது. அதன்படி இறைவனிடம் அன்பு பூண்டு, பின்னர் அடியவர்க்கு அடிமையாதல் மரபு. ''ஆரூரில் அம்மானுக்கு ஆள்'' என முதலில் உரைத்து, பின் ஆரூரன் ''அடியார்க்கும் அடியேன்'' எனக் கூறிக்கொண்டார்.

நம்பி ஆரூரர் திருவவதாரத்தின் சிறப்புப் பயனே திருத்தொண்டத் தொகை அளித்ததாகும். இதனை

''தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்
போதுவார் அவர் மேல் மனம் போக்கிட''

என்று சேக்கிழார் தெளிவு படுத்தியுள்ளார். எனவே, நம்பியாரூரரின் ஏனைய வாழ்வும், வாக்கும் ஒரு பாதி என்றால், இத்திருத்தொண்டத் தொகை மட்டும் மறுபாதி எனலாம்.

மூன்று சொற்களில் தொடங்கி, இரண்டு அடிகளுக்குள்ளாக ஒவ்வொரு திருத்தொண்டரின் சிறப்பையும் சுருக்கமாக உரைத்துள்ளார். ஆனால், அச்சிறு பகுதிக்குள்தான் எத்தனைப் பொதி பொருள்?

சிவனடியார்களுக்கு எதனையும் இல்லையென்னாது வழங்கியது இயற்பகை நாயனாரின் வாழ்க்கைக் குறிக்கோளாகவும், தொண்டாகவும் அமைந்தது. அதனை ''இல்லையே என்னாத இயற்பகை'' என்ற சிறு சொற்றொடரில் அடக்கியுள்ளார்.

''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' எனக் கருதி வாழ்ந்து, பகைவனுக்கும் அருளி, தொழுது வென்றவர் மெய்ப்பொருள் நாயனார். அவர் வழியே உண்மையான வெற்றி வழி (வெல்லும் ஆறு). ''வெல்லு மா மிகவல்ல மெய்ப்பொருள்'' என்ற மூன்று சொற் களில் அவர்தம் வரலாறும் தொண்டும் அடங்கி விடு கிறது.

அகவிதழ், புறவிதழ் என்ற இரண்டு அடுக்கு இல்லாமல் ஒரே அடுக்காக இதழ்கள் பெற்ற மலர் முல்லை. முல்லை மலர் மாலை வணிகர்க்கு உரியது. அமர்நீதி நாயனார் அகமும் புறமும் ஒன்றானவர் என் பதையும், அவர் வணிகக் குலத்தவர் என்பதையும், அவர் சீர்தூக்கும் கோலில் அமர்ந்து நீதியை உலகுக்கு உணர்த்தியவர் என்பதையும் ''அல்லிமென் முல்லையந் தார் அமர்நீதி'' என்ற மூன்று சொற்களில் பொதித்து வைத்துள்ளார் சுந்தரர்.

கண்ணப்பர் கல்லாதவர். 'வேட்டைத் தொழிலுக் கும் புதியவர். அன்றுதான் கன்னிவேட்டைக்குப் புறப் பட்டுச் சென்றார். எனினும், தாம் கண்ட குடுமித்தேவர் பால் ஈடிலா பக்தி மேலிட்டது. ஆறே நாளில் தம் கண்களையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் முதிர்ந்த ஞானநிலை எய்திவிட்டார். ஆதலால் பட்டினத்தார், மணிவாசகர், ஆதிசங்கரர் போன்றவர்களின் அருள் நூல் களில் போற்றப்படும் மேன்மை எய்தினார். இறைவனை அறியும் அறிவே ஞானமும், கல்வியும், கலையும் ஆத லால் காட்டுவேடர் கண்ணப்பரை ''கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பர்'' என்று புகழ்ந்தார் நம்பி ஆரூரர்.

திருக்கடவூர்ப் பெருமானுக்குக் குங்கிலியத் தூப மிட எப்போதும் கலயம் தாங்கி நின்ற தொண்டரைக் ''கடவூரில் கலயர்'' என்றார்.

சிவ வழிபாட்டிற்கு ஊறு செய்தவர்தம் தந்தையே என்றாலும் அவர்தம் காலை மழுவால் வெட்டியவர் சண்டேசர். சிவ நிர்மாலியத்துக்கு உரியவர் என்ற பேறும், 'சண்டேசர்' என்று ஈசுவரப் பட்டமும் பெற்றுத் திகழ்ப வர் அவர். பஞ்சமூர்த்திகளில் ஒருவராக விழாக்காலங் களில் இடபத்தின் மேல் உலாவரும் மேன்மையும் பெற்றவர். எனவே, அவர்தம் புகழைச் சுந்தரர்

''மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க,
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்''

என்ற நீண்ட தொடரால் உரைத்தார்.

ஆகமத்தைத் தமிழாற் செய்திட ஈசனால் வரு விக்கப்பட்ட ஆசிரியராகிய திருமூலரை 'நம்பிரான்' என்னும் அடைமொழியுடன் அழைத்தார்.

தொகையடியார்களாக குறிப்பிடும் இடத்தில் ''பொய்யடிமை இல்லாத புலவர்'' என்கிறார். நக்கீரர், ஔவையார் போன்ற முற்காலப் புலவர்கள், சிறிதும் அச்சமின்றித் தங்கள் கருத்தை உரைத்தனர். சுந்தரர் தமது திருப்புகலூர்ப் பதிகத்தில் ''கொடுக்கிலாதானைப் பாரியே! என்றும், மிடுக்கிலாதானை வீமனே!'' என்றும் புகழும் பொய்யர்களைக் கண்டிக்கிறார். அத்தகையோரின் புகழ் பாடும் புன்மையை விடுத்துப் புகலூர் பெருமானைப் பாடி இம்மையும் மறுமையும் பெற்றிட வலியுறுத்துகிறார். தற்காலத்தில் Hypocrisy எனக் கூறும் போலித்தனத்தைப் 'பொய்யடிமை' என்கிறார் சுந்தரர்.

திருத்தொண்டத் தொகையின் தோற்றத்திற்குப் பின்னால் அவதரித்த தாயுமானவர், குமரகுருபரர், சிவப் பிரகாசர் போன்றவர்களை அறுபத்து நான்காவது - அறு பத்தைந்தாவது என்ற முறையில் நாயன்மார் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கூறுவோர் உள்.

இறைவர் பதிஞானத்தால் உணர்த்தி, சுந்தரரைப் பாடச் செய்த அவ்வறுபத்து மூவரைத் தவிர ஏனை யோர் தனி அடியார் என்றாலும் தொகை அடியார் என்றாலும் 'அப்பாலும் அடிச்சார்ந்தார்' என்ற வகையுள் அடங்குவர். அக்காலத் தமிழகத்துக்கு அப்பாலிருந்தவர் களும் திருத்தொண்டத் தொகையின் காலத்துக்கு அப் பால் (பின்னர்) தோன்றியவர்களும் 'அப்பாலும் அடிச் சார்ந்தார்' பட்டியலில் அடங்குவர். எனவே, தனியான பிற்சேர்க்கை தேவையற்றது.

நெப்டியூன், யுரேனஸ் என்ற புதிய கோள்களைக் கண்டுபிடித்து விட்டாலும் நவகோள்கள் பதினொன்று ஆகாது!

விஞ்ஞானக் கட்டுரை, இயல் தமிழ் தான். கம்ப்யூட்டர் பற்றிய இசைப்பாடல் இயற்றினால் அது இசைத்தமிழ்தான். உடலுறுப்புகள் குறித்து அறிவியல் அறிவு புகட்ட நாடகம் நடத்தினால் அது நாடகத் தமிழ் தான். முத்தமிழ் நான்காகாது.

தடய அறிவியல் என்ற புதுக்கலை அறிமுகம் ஆகலாம். அது அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றான 'சாமுத்திரிகா லட்சணத்'தில் அடக்கம்.


தமிழ் மூன்றுதான்! பூதங்கள் ஐந்துதான்! கோள் கள் ஒன்பதுதான்! கலைகள் அறுபத்து நான்குதான்.

அதுபோல் தனியடியார் அறுபத்து மூவர். தொகையடியார் ஒன்பதின்மர். அவர்கள் புகழ்பாடி நலம் பெறுவோமாக.

★★★

# பெறுதற்கரிய பிறவியின் பயன் யாது?

- நிறைமதி



பெறுதற்கு அரிய மானிடப் பிறவி பெற்ற பயன் யாது எனில் இறைவனை வழிபடுதலே ஆகும்.

மானிடப் பிறவி பெற்றும் இறைவனை வணங்கி வழிபடாதவர் பிராணிகள் ஆவர் எனக் கூறுகின்றார் திருமூலர்.

நம்முடைய திருத்தலங்கள் பலவற்றைப் பறவைகளும், விலங்குகளும், ஊர்வனவாகிய உயிரினங்களும் கூட வழிபட்டுப் பயன் பெற்றுள்ளன. அவற்றின் விவரம் சில பின்வருமாறு :

கழுகுகள் வழிபட்ட தலம் - திருக்கழுக்குன்றம்

சம்பாதி, சடாயு ஆகிய பறவைகள் வழிபட்ட தலம் - புள்ளிருக்குவேளூர்

சிலந்தியும், யானையும் வழிபட்ட தலம் - திருவானைக்கா

யானை, பாம்பு, சிலந்தி ஆகிய மூன்றும் வழிபட்ட தலம் - திருக்காளத்தி

பாம்பு வழிபட்ட தலங்கள் - நாகப்பட்டினம், நாகேச்சுரம், நாகர் கோவில், திருப்பாம்புரம்

மயில் வழிபட்ட தலம் - மயிலாடுதுறை, மயிலாப்பூர்

காமதேனு வழிபட்ட தலம்- கருவூர் ஆனிலை

பசுக்கள் பூசித்த தலம் - திரு ஆமாத்தூர்

எறும்புகள் வழிபட்ட தலம்- திருவெறும்பியூர்

வாலி வழிபட்ட தலம் - வட குரங்காடுதுறை

குரங்கு, அணில், காகம் இம் மூன்றும் வழிபட்ட தலம் - திருக்குரங்கணில் முட்டம்

இவ்வாறு எறும்பு முதலாக யானை ஈறாக உள்ள உயிர்கள் அனைத்தும் இறைவனைப் பூசித்துப் பயன் பெற்றிருக்கக் கண்டும், இறைவழிபாடு செய்யாத மாந்தரைப் பிராணிகள் என்று திருமூலர் சாடும் திருமந்திரப் பாடல் பின் வருமாறு :

''பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே''

- திருமந்திரம் - 2052

# பிரார்த்தனை

**- மயிலை சிவஞான ஜோதி சிவசக்தி அம்மையார்**

இறைவனைப் பிரார்த்தனை செய்வதில் பலவித பாவம் உள்ளன. மாத்ரு பாவம், பித்ருபாவம், சகோதர, சகோதரி பாவம், குழந்தை பாவம், நாயக நாயகி பாவம், மித்ருபாவம், இப்படி பல பாவங்கள் உள்ளன. இதில் தாய் தந்தையராம் இறைவனுக்கு அடிக்கவும் அணைக்கவும், அதாவது இன்பத்துன்பம் கொடுக்க உரிமை உண்டு என்று சரணாகதியாகிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். மனதில் மாசு இல்லாதவனாக மனத்தூய்மையுடன் இறைவனைப் பிரார்த்தனை செய்திடவேண்டும். மனதின் அழுக்கைத் தண்ணீர்கொண்டு சுத்தப்படுத்தமுடியாது. இறைவன் நாமம் சொல்லி பிரார்த்தனை விரைவில் நிறைவேறும் பக்தியுடன் பிரார்த்தனை செய்தாலும், என்னால்முடியும் என்று எண்ணும்வரை இறைவனின் திருவருள் கிடைப்பதில்லை. எல்லாமே சிவன் செயல் என்று சரணாகதியாகிப் பிரார்த்தனை செய்தால் அடைந்திடும் இன்பம் எல்லை இல்லை. கல்லாதவரும் நல்ல அன்பு பண்புகளுடன் கூடிப் பிரார்த்தனையினால் இறைவனது அன்பினை, அருளைப் பெறலாம். பக்தி யோகமே சிறந்த பிரார்த்தனையாகும். பக்தியுடன் கூடவே பண்புகளாம் கர்மயோகம் சேர்ந்தால் ஞானம் பிறக்கும். பக்தி யோகம், கர்மயோகம், ஞானயோகம் இவைகளின் பிரார்த்தனையினால் இறைவனின் திருவடி இன்பமாம் பிரும்மஞானம் கிடைக்கும். பிறவி வேண்டாம் என்று நாம் பிரார்த்தனை செய்தால் இறவாத பேரின்ப நிலைக்கு வழிநடத்திச்சென்று பிறவா இறவா பேரின்பமும் அளிப்பார். ஆறறிவு படைத்த மனிதன், கேட்கத் தெரிந்தவன், சிந்திக்கத் தெரிந்தவன், பேசிடும் திறமை உள்ளவன். இவ்வளவு திறமை பெற்ற மனிதன், சிந்தனை, சொல், செயல் ஒன்றாயிருந்து, உள்ளம் நெகிழ்ந்து உருகிஉருகி உண்மையாகப் பிரார்த்தனை செய்யவேண்டும். தாய்தந்தையாம் நம் இறைவனைப் பிரிந்து தனியானோம் என்ற உணர்வோடு இறைவனைத்தேடி சரணாகதியாதி உன்உரிமைக்குழந்தை உன்னைச் சேர்ந்திட வேண்டும் என்று உரிமையுடன் கேட்டு பிரார்த்தனை செய்திடவேண்டும். கருத்தினில் உன்நினைவும், உள்ளத்தில் உன்குணமும் வேண்டும் என்று பிரார்த்தனை செய்திடு. நினைத்தாலே முடிக்கும் இறைவன் நாம் உருகி அழுது கேட்டால் நிச்சயம் தருவான். தன்னையே நமக்குத் தந்திடுவான். தானேதவம் யோகம் தந்து தானாக்கி மகிழ்வான்.

இறைவன் அருகிலேயே உள்ளான் என்பதை உணராதவரையில் எங்கோ உள்ளான் என்று நினைத்து, மனிதன் சப்தமிட்டே பிரார்த்தனை செய்கின்றான். இறைவன் தன்னுள்ளே உள்ளான் என்பதை அனுபவமாக உணர்ந்தபின், சப்தமின்றே மோனமாக சதாநேரமும் பிரார்த்தனை செய்கின்றான். மானசீகம் வேகம் அல்லவா, மானசீகப் பிரார்த்தனையினால் நாம் ஆகாயவிமானத்தில் பறப்பதுபோன்று வேகமாக இறைவனது திருவருளையும் திருவடியையும் பெறலாம். இது நிச்சயம். இது சத்தியம். அடியார்களின் அருளுரை அறிவுரைகளை நம்பி, அதன்படி நடந்தால், பிரார்த்தனை செய்தால் இறைவனது அருளைப்பெறலாம். ஏட்டிலே படித்தவற்றைக் காற்றினில் பறக்கவிடாமல் ஏற்றமுள்ள அறிவுரையை ஏற்று பிரார்த்தனை செய்திடணும். கற்ற கல்வியினால் மெத்தபலன் உண்டு. கற்றபடி பிரார்த்தனை செய்தால் கற்பகஅருள்நிச்சயம் உண்டு. வெற்றி கிடைக்க வேண்டுமென்றால் பிரார்த்தனைகள் மூலமாக சோதனைகளை வென்றிடணும். அலைபாயும்மனதை அலைய விடாமல் சதாநேரமும் இறைவன் நாமம் சொல்லி பிரார்த்தனை செய்திடணும். இறைவனை நினைக்கும் போதும், துதிக்கும்போதும், நெகிழ்ந்து உருகி ஆனந்தக் கண்ணீர் பெருக பிரார்த்தனை செய்திடணும். பேச்சும் மூச்சும், உணவு, உடை, உடல், உயிர், உணர்வுகள் யாவுமே இறைவனது அருளில் என்றுணர்ந்து பிரார்த்தனை செய்திடணும்.

உண்ணும்போதும் உறங்கும்போதும் இறைவனைப் பிரார்த்தனை செய்திடணும், கண்ணிலும் கருத்திலும், எண்ணும்போதும், எழுதும்போதும் கூட இறைவன் நினைவாகப் பிரார்த்தனை செய்திடணும். காணும் பொருள்கள் யாவிலும் இறைவனது இயற்கையை ரசித்து ருசித்து பிரார்த்தனை செய்திடணும். இயற்கையாம் பஞ்ச பூதங்களாம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன் சந்திரன் இவைகளுக்கு நாம் என்ன கைம்மாறு செய்கின்றோம், என்று பலனை எதிர்பாராத குணம் நமக்கும் வேண்டுமென்று பிரார்த்தனை செய்திடணும். உலகத்தாயின் குணம் கொண்டு, தாயும்சேயும் ஒன்றாகிவிடவேண்டும் என்று பிரார்த்தனை செய்திடணும்.

அன்பு உள்ளத்துடன் பிரார்த்தனை செய்தால், அன்பு உள்ளத்தினில் பள்ளத்தில் வெள்ளம் போல் இறைவன் தங்கிவசிப்பார். இரக்கம்கொண்டு பிரார்த்தனை செய்பவரின் இதயக்கோயிலில் குடிபுகுவார். தலையாய நல்ல குணத்துடன் கூடிய பிரார்த்தனையால் நிலையான

பேரின்பமே உண்டாகும், குறையாத அன்புடன் கூடிய பிரார்த்தனையால் நிறைவான பேரின்பமே உண்டாகும். கோதில்லா குணத்துடன் கூடிய பிரார்த்தனையால் கோடிகோடி பேரின்பமே. கணக்கில்லாமல் அருள்புரியும் இறைவனைக் கணக்கில்லாது பிரார்த்தனை செய்தால் கணக்கில்லாப் பேரானந்தமே. கணக்கில்லாத இறைவன் அன்பாம் மாசில்லா சிறந்த தொண்டுடன் கூடிய பிரார்த்தனையால் மகாஜோதி பேரின்பமே கணக்கில்லாத சூரிய ஒளியாம் அருட் ஜோதிப் பேரின்பமே. பலனைப்பாராத ஆத்ம திருப்தியாம் சரணாகதியாம் பிரார்த்தனையால் திருவடிப்பேரின்பமே. அறம்பொருள் இன்பம் வீடு நான்கினையும் நாளும் எந்தெந்தவேளையிலும் பற்றுடன் செய்து அனுபவித்து, இறைவனைப் பற்றி பிரார்த்தனை செய்து மனதில் பற்று இன்றி இருப்பதே நித்தியமான சத்தியமான துறவாகும். உடல் தூய்மையும் மனத்தூய்மையும் நமது மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்திட உதவும். நல்லொழுக்கம் நல்லெண்ணங்களுடன் கூடிய பிரார்த்தனைகள் எளிதில் நிறைவேறும்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழவேண்டும் என்று இறைவனை பிரார்த்தனை செய்திடணும். துன்பம் கொடுப்பவர்களும் நிந்திப்பவர்களும்கூட நன்றாக இருக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்திடணும். உள்ளும் புறமும் ஒன்றாகிப் பிரார்த்தனை செய்திடணும். புரியாமல் பழிப்பவர்களை, தீமை செய்பவர்களை மன்னித்துவிடுங்கள் என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்திடல்வேண்டும். அவர்களை நல்லவர்களாக்கிவிடு என்று பிரார்த்தனை செய்திடணும்.

அயரா உழைப்புடன் ஆண்டவன் நாமம் சொல்லி பிரார்த்தனை செய்திடணும், உடலால் செயல்களைப்பற்றி, மனதில் நாமத்தைப்பற்றிப் பிரார்த்தனை செய்திடணும், பிறவியால் வந்த பிணிகளும் துன்பங்களும் நீங்குவதற்கும் தாங்குவதற்கும் இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம். அதுபோல் பிறவிப் பிணியும் நீங்கிடப் பிரார்த்தனை செய்யவேண்டும். இறைவனது திருவடிப் பேரின்பம் கிடைத்தால் பிறவிப்பிணி நீங்கும். முப்பாலாம் திருக்குறளைப் படித்து, அவரவர்க்குத் தகுந்த அறிவுரைகளை ஏற்று அதன்படி நடந்து பிரார்த்தனை செய்தால், பிறவியால் வந்தபிணியும், பிறவிப் பிணியும் நீங்கும். இது நிச்சயம்.

ஆத்மாவும் மனதும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகப் பிரார்த்தனை செய்திடணும். இவ்விதப் பிரார்த்தனையால், பிறப்புக்கும் இறப்புக்கும் விடுதலை கிடைக்கும். பிரார்த்தனையால், ஆன்மாவின் விடுதலை, ஐந்து பூதவிடுதலை, மீண்டும் உடலைத்தேடி புகுந்திடாத விடுதலை, மனிதப்பிறவியினில் சத்தியமாகக் கிடைக்கும். அடங்காமனதினை அடக்கப் பிரார்த்தனை செய்திடணும். அடங்கிய மனதில் ஒடுங்கிப் பிரார்த்தனை செய்திடணும். மனம் வாக்கு காயம் சுத்தமாகிட பிரார்த்தனை செய்திடணும். சிந்தனை, சொல், செயல் ஒன்றாகிப் பிரார்த்தனை செய்திடல்வேண்டும். சிவனை சதாநேரமும் மறவாதிருத்தலே சிறந்த பிரார்த்தனையாகும். அருள் ஒளியாகி அருள்உடல் ஒளியாகி, பொன்னொளியாம் பரஞ்ஜோதியினுள் கலந்தபின்பும் இறைவனது அன்பினையும் அருளையும் நினைத்து, உருகி, நெகிழ்ந்து, மகிழ்ந்து, சரணாகதியாகி, மனதினில் மோனமாகப் பிரார்த்தனை செய்தல், பிறவியை வெல்லும் சிறந்த தவமாம் பிரார்த்தனை ஆகும். புலன்களை அடக்காமல் அடக்கி நற்செயல் செய்து பிரார்த்தனை செய்திடணும். மனதில் கூட தீயவற்றை எண்ணாமல் அறச்செயல்களுடன் கூடிய பிரார்த்தனை செய்தால், இறைவனது பேரன்பைப் பெறலாம்.

> ## வழிபாடு தேவை
>
> மனிதனுடைய மனதில் இருளுக்கும் ஒளிக்கும் இடையே நிரந்தரமாக ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டு உள்ளது. வழிபாடு என்ற சிறந்த பாதுகாப்பை நம்பியிராதவன் இந்தப் போரில் இருளுக்கு அடிமை ஆகிவிடுவான். வழிபாடு செய்பவன் மனச்சாந்தி பெற்று உலகத் தோடு மனமொத்த அன்பு பூண்டு வாழ்வான். ஆகையால், தினசரி வாழ்க்கையில் முதல் வேலை யாக வழிபாடு செய்யுங்கள்.
>
> - மகாத்மா காந்தியடிகள்.

பிரார்த்தனை செய்வதால் நன்மைகள் பலபல. பிரார்த்தனைகள் செய்வதனால் உடலும் பளபளப்பு. புனிதமில்லாப் பாபச்செயல்கள் புரிபவன் பிரார்த்தனைகள் செய்தும் பலன் இல்லை. அம்மா, அப்பா, உடன் பிறந்தவர்களைக் காப்பாற்றும் கடமையைச் செய்யாமல், புண்ணிய க்ஷேத்திரங்கள் சென்றுவரும் பிரார்த்தனைகளும், நதியில் ஸ்நானம் செய்திடும் பிரார்த்தனைகளும் வீணாகும். பக்தியும் பண்பும் கூடியப் பிரார்த்தனையினால் ஆன்மஉணர்வுகள் உண்டு. ஆன்மமுக்தியாம் அருட்பெருஞ்ஜோதி இன்பமும் உண்டு.

பண்புடன் கூடிய பக்தியாம் பிரார்த்தனையால், சுவைக்கச்சுவைக்கத் திகட்டாத நிலையான பேரின்பம் உண்டு. இயற்கையை ரசித்து, இறைவனின் குணம் கொண்டு பிரார்த்தனை செய்திடல் சிறந்தது: அவரவர் தாய்மொழியினில், பொருள்புரிந்து பிரார்த்தனை செய்

தல் நல்லது(சிறந்ததாகும்). உருகிப்பாடி, உள்ளம் உருகி நெகிழ்ந்து கண்ணீர்விட்டு, மெய் சிலிர்க்கப்பாடி பிரார்த்தனை செய்திடணும். இறைவன் நாமம் சொல்லக் கூசாமல், அஞ்சாமல், இறைவனன்றி எதையும் பேசாமல், எதையும் நினைக்காமல் பிரார்த்தனை செய்திடணும். மன்னுயிர்யாவும் தன்னுயிர்போலே எண்ணி, எல்லா உயிர்களும் இன்புற்று வாழப் பிரார்த்தனை செய்திடணும். அகம் தழுவிப் பிரார்த்தனை செய்யும் அடியாரின் அகம் தழுவி அருள்வான் இறைவன். இவ்வுலகின் தாய் தந்தை சிவனும் சக்தியுமே என்ற இனிய பாச உணர்வுடனே பிரார்த்தனை செய்திடணும். இறைவனின் நாம சங்கீர்த்தனத்தில் தன்னை மறந்து லயித்து பிரார்த்தனை செய்திடணும். நான் உன் உரிமைக் குழந்தை என்று உருகி அழுது, உறவு சொல்லி அழைத்துப் பிரார்த்தனை செய்திடணும். இல்லறஞானியாய் நல்லறம் செய்து பிரார்த்தனை செய்திடணும். ஐந்தெழுத்தோதியே பிரார்த்தனை செய்திடணும். பூரண அன்பால் சரணாகதியாய் பூரணன்திருவடிபற்றிய பின்பும் சரணாகதியாகிப் பிரார்த்தனை செய்திடணும்.

கல்லாம் மனதையும் உருகச் செய்யுமாறு பிரார்த்தனை செய்திடணும். பசிமறந்து, தாகம்மறந்து, தன்னைமறந்து, காலம்மறந்து, மனதில் லயித்து இதயத்தில் இறைவனை இருத்தி பிரார்த்தனை செய்திடல் வேண்டும். பேச்சும் மூச்சும் பரமன் நினைவாகப் பேசிப் பழகி சதாநேரமும் பிரார்த்தனை செய்திடணும். தர்ம சிந்தனையுடன் பெற்றோரையும் மதித்து உண்மையைப் பேசி, குருவையும் மதித்துப் பிரார்த்தனை செய்திடணும். தன்தவறை உணர்ந்து பிறர்தவறை மறந்து திருந்தி பிரார்த்தனை செய்திடு. சுயநலம்இன்றி சுயநினைவுடனே, சுயம்புஜோதியை சுயமாக நினைத்துப் பிரார்த்தனைசெய்திடணும். இருக்கும் இடத்திலிருந்து இறைவனை நினைத்து, இயற்கையைரசித்து, இறைவனின் குணம் கொண்டு பிரார்த்தனை செய்திடணும். தியாககுணம் கொண்டு, மனிதாபிமானம் கொண்டு, பரோபகாரம் செய்து பிரார்த்தனை செய்திடு. பூனைக் குட்டி போல் கவலை இன்றி பரிபூரண சரணாகதியாகிப் பிரார்த்தனை செய்திடு. காலையும் மாலையும் சூரியனும் சந்திரனும் சேரும் பிரதோஷக் காலத்தில் வணங்கு. பிரார்த்தனையினால் நமக்கும் கிடைக்கும் புலன்கள் பலபல. தூய்மையான மனதில் பக்தி, பண்பு என்னும் விதைகளை நாம் ஊன்றினால், அந்த விதைகள், முளைவிட்டு, துளிர்விட்டு, கிளைவிட்டு, பூத்துக் காய்த்து, பழுத்துப் பழமாகி, பழம் பக்குவமாகி, ஞானப்பழமாகி, இறைவன் விரும்பும் அன்புப் பழமாகி, ஆனந்தப்பழமாகி, அருட்ஜோதிப் பழமாக வேண்டும். பிறவா இறவா பேரானந்தப் பழமாக வேண்டும். சிறந்த பிரார்த்தனையால் நமக்கு அகப்படுவது பேரன்பென்னும் பரம்பொருளாகும். பிறப்பு இறப்பற்ற, பேரின்பஇறைவனாம், பேராற்றலாம், பேரறிவாம் பரம்பொருள் நம்மைத்தேடி வந்து கூடி ஆனந்தக்கூத்தாடி, கோடி கோடிப் பேரின்பம் அருளும், சிவசாயுஜ்யம் பெறலாம்.

நான் கூறும் பிரார்த்தனைகள் செலவே இல்லாத பிரார்த்தனைகள். பயமே இல்லாத பிரார்த்தனையாகும். பிறர் அன்பினைப்பெற்று இறைவனது பேரன்பினைப் பெறும் பிரார்த்தனையாகும். பிரார்த்தனைகள் அழியா சொத்தாம், யாரும் பறித்துக் கொள்ளமுடியாத சொத்தாம். இறைவனின் பேரன்பு, பேரறிவு, பேராற்றல்கள் வந்து பொருந்தும். பிரார்த்தனையினால், அன்பு, பண்பு, இன்பம், அமைதி, சாந்தி, நிம்மதி, ஆன்மசுகமாம், ஆனந்தம், ஏகானந்தம், பரமானந்தம் உண்டாகும்.

இறைவனைப் பிரார்த்தனை செய்வதாம் ஞானம் மூன்று வகைப்படும். அவையாவன. 1. பாசஞானம் 2. பசுஞானம் 3. பதிஞானம் எனப்படும். வேதம், சாத்திரம், புராணம், மந்திரம், பூஜைகள், ஹோமம், சம்பிரதாயங்கள், இவைகளினால் கடவுளைப் பிரார்த்தனை செய்வது பாசஞானம். இது பாசபந்தமான பிறவியினைத் தரும். மாயா காரியங்களாகிய, பாசஞானப் பொருள்களின் தன்மைகளை அருளில் உணர்ந்து, தான் இவற்றின் வேறான பொருள் என்பதைமட்டும் உணர்ந்து, தனது ஆத்மபந்தத்தின் வேறுபட்ட அறிவு சொரூபமான பொருள் என்பதைமட்டும் உணர்ந்து ''நானே பிரும்மம்'' என்று செருக்குற்றுநிற்றல் பசுஞானமாம். பாச ஞானத்தை அகற்றி, பசுஞானத்தையும் அகற்றி இறைவனது திருவருளில், இறைவனாகிய பதியை உணர்ந்து கலந்து, இறைவனது திரு வடியின் கீழ் நின்று, திருவடிப்பேரின்பத்தை உணர்ந்து உலகுக்கு உரைத்தல், திருவடிப்பேரின்பமாம், பிரும்ம ஞானமாகிய, சிவஞானமாம், பதிஞானமாகும்.

திருவடியில் சரணாகதியாகி, அப்பொழுதும், ''இறைவா! எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒன்றுமே தெரியவில்லை. ஒன்றுமட்டுமே புரிகின்றது. அது நீயே என்தாய்தந்தை, நானோ உன்குழந்தை. நீயே நானாகி மகிழ்ந்திடும் ஆனந்தம். நீயே எனக்குத் தந்த அனுபவப் பேரின்பம்'' என்று ஆணவம் இன்றி அடக்கமாக, அன்புடன்உருகி, ஜோதியுள் சரணாகதியாக அடங்கி, பிரார்த்தனை செய்திடல் வேண்டும்.

அம்மை அப்பா! நீதானே வந்து அணைத்து எனக்குத் திருவடிப்பேரின்ப அமுது அளித்ததால், என்னைப் போலவே மற்ற உன்குழந்தைகளும் அம்மை அப்பனாகிய உன்னைஅடைய, அவர்களை நான் அழைத்தால் வந்திடும் அருள்தாராய்! அடியேன் உரைத்ததால் உணர்ந்திடும் அருள்தாராய்! என் அம்மைஅப்பா! அடியேன் கரைந்துண்ணும் காக்கைப்போல் கரைகின்றேன்! அடியேன் பகிர்ந்துண்ணும் காக்கைப்போல் பகர்கின்றேன்! என்று உருகி கண்ணீர்விட்டு, திருவடியில் கலந்த பின்பும் பிரார்த்தனை செய்திடணும். அடிக்கடிஅல்ல. ஒரேஒருமுறை பிரார்த்தனை செய்து பாடினால் போதும். இறைவனருளில் அழைத்தாலும், உரைத்தாலும் மற்ற குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர். ஞான விழிப்பினைத்தூண்டி விடுவதற்குத்தான் அடியேன் இறைவனருளில் அழைக்கின்றேன்.

தேடித்தேடி இறைவனைத் தேடி அலைந்திடும் அன்பர்களே! வாருங்கள். கண்ணை மூடிக் கடவுளைக் காணும் வழியினைக் கூறுவேன். பிரார்த்தனை செய்திடும் வழிமுறைகளைப் பலவிதமாகக்கூறியதுபோன்று, கண்ணைமூடி நம்முள் காணும் பிரார்த்தனைமுறையினையும் கூறுகிறேன். கேளுங்கள். உள்ளம் நெகிழ்ந்து உருகிஉருகி உண்மையாக உறவுசொல்லி தந்தைதாயாக வணங்கிப் பிரார்த்தனை செய். இஷ்டதெய்வத்தை இதயத்தில் இருத்தி, இரவும்பகலும் துதிபாடி பிரார்த்தனை செய்திடு. கண்ணைமூடி, கருத்தினில் அன்புடன் நினைத்து, இதயத்தில் இறைவனைப் பதித்துப் பார்த்து, இதயத்தில் உன்னையும் நீ பார்த்து, இதய இறைவனுக்கு இதயத்தில் உள்ளநீ, பாதவணக்கம் செய்து, இனிய பாசத்தை வளர்த்து, இறைவனை அடைவதையே இலட்சியமாகக் கொண்டு பிரார்த்தனை செய்திடு. ஆசைகளை அடக்காமல் அளவுடன் அடக்கு. நல்ல குணங்களை வளர்த்துவிடு. யார்மனதையும் புண்படுத்தாதிரு. தன்னைப்போலவே பிறரை நினைத்திடு. பலனை எதிர்பார்க்காமல் கடமையை செய். இறைவனது நாமத்தை துணையாக ஊன்றுகோலாக, பக்கபலமாகக் கொண்டிடு. இந்த குணங்களுடன்கூடிய இதயக்கோயிலில் சரணாகதியாகிய பிரார்த்தனையால், இதய இறைவன் அன்புடன் இதயத்தில் நமது தலை உச்சியினை வருடிக் கொடுக்க, ஜீவசிவ ஐக்கியமாம் சமாதிநிலை அடைவாய். அதன்பின்பும் உருகிப்பாடி பிரார்த்தனை செய்தால் இதயஇறைவன் மறைந்து, இதயலிங்கத்தைக் காணலாம். இதயலிங்கத்திலிருந்து உதயமாகி ஆத்ம ஜோதி எழுந்துவரும். உடனே இதய சிவலிங்கம் மறைந்து விடும். உடல் என்னும் வீட்டில் வசிக்கும் ஆத்ம ஜோதியைக் கண்டபின்பும், இறைவனைப் பிரார்த்தனை செய்திடணும். அதனால் சித்தத்தின் மாயத்திரை விலகும். ஞானக்கண் திறக்கும். அதன்பின்பும் பிரார்த்தனை செய்தால், ஞான ஜோதியாகலாம். ஆத்மஜோதி ஞான ஜோதியானபின்பும், பிரார்த்தனை செய்து பாடினால், ஞான ஜோதியில் சிவனே சிவகுருவாக வந்து, பக்கக் கண்மணியாகத்துணை வந்தபின்பும், சரணாகதியாகப் பிரார்த்தனை செய்தால், சிவகுருவின் உபதேசமந்திரம் பெறலாம். மோனமான உபதேச மந்திரத்தை, ''ஓம்நம சிவாய சிவாய நமஓம்'' என்று, மோனமாக உதட்டைக் கூட அசைக்காமல் இரவும்பகலும் உருகிச் சொல்லி பிரார்த்தனை செய்திடணும். அதனால், புருவநடுவினில் ஆத்மஜோதியினில் சிவபெருமான் காட்சிகண்டு ஆசி பெறலாம். சிவபெருமான் காட்சி கண்டபிறகு, ''காட்சி தந்து மறைந்துவிட்டாய். காட்சிவேண்டாம் கலந்து கொள்'' என்று பித்தனாகிப் புலம்பிப்புலம்பி அழுது பிரார்த்தனை செய்திடணும். ''தாய் தந்தையைக் கண்ட அடியேன் தாய்தந்தையை அடைய ஆவலுடன் துடிக்கிறேன். அம்மையே! அப்பா! என்னை அருகினில் அழைத்திடு! அடைக்கலம் கொடுத்திடு!'' என்று, தலைக்கு மேல் கையைத் தூக்கி சரணாகதியாகி அழுதுப் புலம்பி உருகி பிரார்த்தனையை இரவில் தூக்கம் கூடவராமல் அழுது பிரார்த்தனை செய்திடணும்.

அர்த்த ராத்திரியில், கண்ணைப் பறிக்கும்வண்ணம் மாணிக்க வண்ணமாக வான்ஜோதி இறங்கிவரும். அதில் பச்சைவண்ணமாம் மரகதவண்ண ஜோதியைக் கண்டவுடன், கண்ணின் ஜோதியாம் கந்தன், ஆத்ம ஜோதியை, விண்ஜோதியுள்ளே தூக்கிச் சேர்த்திடுவான். விண்ணின் ஜோதி, ஆத்ம ஜோதியைத் தூக்கிக் கொண்டு மேலேறிசென்று கண்ணிலே பக்கத் துணையாய்த் தங்கும். அப்பவும் உருகிப்பாடி பிரார்த்தனை செய்திடணும். வான்ஜோதி, தானேதவம் யோகம் எல்லாமே சிவகுருவின் துணையில் செய்யவைத்து, தானாக்கி மகிழ்ந்திடும். பரிசுத்த சிவமாக்கி மகிழும். பிறப்பு இறப்பு அற்ற மரணமில்லாப் பேரின்பம் அருளும். அதன்பின்பும் இல்லற வாழ்விலிருந்து இல்லற கடமைகளைச் செய்துகொண்டே, பூஜைகளும் பிரார்த்தனைகளும் தனக்காக கிடையாது; ஆனால், சிரசின் உச்சியினில் ஜொலிக்கும் ஜோதிப் பிழம்பையும், கண்ணின் மணியாம் ஜோதியையும் அடிக்கடி கண்ணைத்திறந்தே பார்த்து, ரசித்து, மகிழ்ந்து, மனதில் நினைத்து உருகி நெகிழ்ந்து கண்ணீர் விட்டுப்பாடிப் பிரார்த்தனை செய்திடணும். பரமனின் திருவடியில் இரண்டறக் கலந்ததனால் அடியேன் பேரின்பசிவம் அன்றோ! அடியேனின் அருள் உடலில் அன்புடன் புகுந்ததனால் அடியேன் இன்னல்கள் உமக்கன்றே. அதனால் கண்ணின் மணியாக நீ இருந்தும் கண்கள் கவலையால் வாடியது. கண்ணின் ஒளியாக நீ இருந்தும் கண்ணில் கண்ணீரும் வருகின்றது என்று, சிவகுருவாகிய கண்மணியாம் கந்தனை நினைத்து உருகிப்பாடி பிரார்த்தனை செய்திடணும். அதன்பிறகும் இறைவன் உணர்த்த இறைவனை அடையும் வழிமுறை அருளுரை, தத்துவ விளக்கங்கள் இறைவன் உடலில் உணர்வாக உணர்த்தி, உணர்வைத்தூண்டி எழுதவைத்து பாடவைத்து உலக மக்களாகிய உங்களுக்கும் உண்டு என்று அழைத்திடும் போது, அடியேன் அழைத்தால் வந்திடும் அருள்தாராய்! அடியேன் உரைத்தால் உணர்ந்திடும் அருள்தாராய் என்றும் அம்மைஅப்பா நீ தானே வந்து அணைத்துத் தானாக்கி மகிழ்ந்ததால் அடியேன் கரைந்துண்ணும் காக்கைப் போல் கரைகின்றேன்; அடியேன் பகிர்ந்துண்ணும் காக்கைப்போல் பகிர்கின்றேன் என்று உருகிப்பாடி பிரார்த்தனை செய்திடணும். அருட்பெருஞ் ஜோதி இறை வனுடன்கலந்துகொண்டு, காக்கைப்போல் கரைந்து அழைத்து, இறைவனைப் பிரார்த்தனையின் மூலமாக அடைந்து மகிழும் ஆனந்தமாம் வழிமுறைகளைக் கூறி அறிவுரையையும் அருளுரையையும் கூறி அழைத்து, அருட்பெருஞ்ஜோதியினுள் கரையும் வரை காக்கைப் போல் எல்லோரையும்கரைந்து அழைத்துப் பிரார்த்தனையின் பலன்களைப் பகிர்ந்து அளித்துக் கொண்டேயிருக்க வேண்டும்!

ஓம்! ஓம்! ஓம்!

# பெரிய புராணம் புதுமையும் பொதுமையும் செய்த காவியம்

- 'அருட்கதை நம்பி' புலவர் கோ. சாரங்கபாணி

சிவபெருமான் திருமுன்பு ஆளுபவன், அடிமை, ஆண், பெண்; இளையவர் முதியோர்; கற்றவர் கல்லாதவர் என்கிற வேறுபாடுகள் இல்லை.

''கங்கைவார்சடைக் கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''

என்று அப்பர் அடிகள் பாடியது போன்று, சிவன் கழற்கே சிந்தை செய்வாராயின், அவர் கண்டீர் இறைவனின் அன்பராவார் என்று கூறி விடலாம். கண்ணப்ப நாயனார் சிறிதும் கற்றிலாதவர்; சிவகோசரியார் வேதாகமங்கள் கற்றவர்; இருவர்க்கும் ஒப்பவே அன்பும் அருளும் செய்கிறான் பெருமான்.

திருஞானசம்பந்தர் மூன்று வயதில் இறைவனின் பேரன்புக்குப் பாத்திரர் ஆகிறார். பரசமயம் சென்று வந்தாலும் தன்னைப் பரவுகிற அப்பர் அடிகட்கு அவர் முதுமையில் அருள் பாலிக்கிறான் ஐயன். இல்லின் கண் இருந்து அடியார்க்கு இனிமை செய்த காரைக்கால் அம்மையாரை,

''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண்''

என்று தனக்குத் தாய் என்கிற பெருமையை இறைவன் தருகிறான்.

ஒரு தாயின் வயிற்றில் கருவிருந்து வாராத பெருமைக்கு உரியன சிவனின் தோற்றங்கள்.

அப்படியிருந்தும், புனிதவதியாரை ''அம்மையே'' என அழைக்கிறான் சிவபெருமான்.

''அம்மை தமக்கில்லார் அம்மை எவ்வுயிர்க்கும்
தாம் ஆனார்; அம்மையே என அழைக்கும் அம்மை''

என்றார் சான்றோர் ஒருவர்.

பெண் என நினைந்திடாமல், தமக்குத் தாய் என்றே போற்றுகிறான்.

சுந்தரர்க்குத் தோழமையாக ''உனக்கு நம்மைத் தந்தனம்'' என்று தந்த பெருமைக்குச்சிறிதும் குறையாமல் அம்மையார்க்கு உயர்வு தருகிறான் பெருமான்.

மன்னவன் சமைத்த திருக்கோயில் விழாவானாலும் அதனை விடுத்துப் பூசலார் என்கிற எளிய அந்தணர் தம் மனத்தில் நினைத்து வகுத்த கோயில் குட நீராட்டு விழாவுக்கு உரிய நேரத்தில் சென்று சிறப்புச் செய்யும் சிவனின் தகைமை நம்மை வியக்க வைக்கிறது.

அவர் முன்பு எல்லாம் சமம்.

அடியாரின் அன்பை நுகர்வதில்தான் அவர் பல்வேறு நிலைகளைக் கொள்கிறான்.

''மையல் மானுடமாய் மயங்கும்வழி
ஐய நீ தடுத்தாட் கொள்ள வேண்டும்''

என்று கயிலையில் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்ற ஆவணங்காட்டி, வழிகாட்டி, 'பழைய மன்றாடி போலும்'' என்று கூறப்பெற்றவனாய் ஆடல் புரிகிறான். அண்ணல் கடுமையான சோதனைகளைச் செய்து சிலரை ஆட்கொள்கிறான். சிலரிடம் மிக்க கனிவு காட்டி ஆட்கொள்கிறான். இப்படியன் இந்நிறத்தன் என்று எழுதிக் காட்ட ஒண்ணாத அழகன் எனப்படுவது போன்றே இப்படித்தான் உயிர்கட்கு இறைவன் அருள் செய்வான் என்று ஒரு முடிவுக்கு நாம் வர இயலாது.

மருத்துவர், நோய்க்குத் தக்கவாறு வேறு வேறு சிகிச்சைகள் செய்வதுபோல இறைவனும் ஆன்மாக்களின் நல்வினை தீவினைகட்கேற்ப வேறு வேறு நிலைகளில் தண்ணளி செய்கின்றான்.

அறுபத்து நாயன்மார்களில் ஓர் அடியவர்க்கு எத்தகைய சோதனையும் இன்றித் தான் உவந்து நாடிச் சென்று அருள் செய்கிறான்.

**இசையும் ஈசனும்**

சிவபெருமான் இசையில் பெரும் நாட்டம் உடையவன். ஈசன் செவிக் குண்டலங்களில் இரு அசுரர்கள் இருந்து யாழ் இசைத்துக் கொண்டே உள்ளனர். சிவனின் பாகம் அமர் தேவியாம் பரமேஸ்வரி, தன் நாதனின் இசை விரும்பும் இயல்புக்கேற்பத் தன் குரலையே வீணைபோல ஆக்கிக்கொண்டார். வீணை

## ஞானியர் பெருமை அளவிடல் ஆகாது

கடலில் உள்ள தண்ணீரை இத்தனைபடி என்று அளந்துவிடலாம். அதனில் வீசும் அலைகளையும் எண்ணிஅளந்து விடலாம். இமய மலையைத் தலையில் இட்டு இத்தனை 'டன்' என்று நிறுத்து விடலாம். வானத்தை அங்குலக்கோலால் இத்தனை அங்குலம் என்று அளந்துவிடலாம். ஆனால் ஞானியர் பெருமையை எதனாலும் யாராலும் அளக்க முடியாது.

''அருள்மொழி அரசு''

- திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

மிழற்றுவது போன்று இருக்குமாம் தேவி பேசினால்; அதனால் அன்னைக்கு 'வீணா பாஷணி'' என்று பெயர் ஆயிற்று திருமறைக் காட்டுப் பிராட்டிக்கு. இறைவனார் இசை நாட்டமே ஆனாய நாயனார் எனும் அடியவருக்கு எளிதில் இன்னருள் செய்ய வைத்தது.

வேய்ங்குழலில் ''சிவாய நம'' எனப் பல இசைகளில் விண்ணும் மண்ணும் உருக இசைத்த ஆனாயருக்கு அவரிடம் வேறு எந்தத் தகுதியும் எதிர் நோக்காமல் பக்தியுடன் குழலூதும் ஒன்றையே கொண்டு அவர்க்குப் பெரும்பதம் அளிக்கின்றான் பெருமான்.

### ஆனாய நாயனார்

நீர் வளம் மிக்க மேல் மழநாடு என்னும் ஊரில், ஆயர்குலத்தினில் தோன்றியவர் ஆனாயர். ஆயர்குலத்தில் தோன்றுவோர் கண்ணன் கழல்களையே எண்ணும் மரபினர். அவர்களுள் ஆனாயர், தூயசுடர்த் திரு நீறு விரும்பும் உள்ளம் உடையவர், சிவபிரான் அடியன்றி வேறு தம்மனத்தில் நினையாதவர், பசுக்குலங்களை மேய்க்கும் தொழும்புடையார்.

கார் காலத்தில் பசுக்களை மேய்த்து வரும் ஒரு நாளில் சிவபெருமான் போல தோற்றம் அளித்த கொன்றை மரத்தைக் கண்டு மனம் உருகிப் போனார். அவன் கொன்றை மலர் சூடுவதால் கொன்றையாண்டி எனும் பெயரும் உடையவன். எனவே கொன்றை மலர் குலுங்கும் மரத்தைக் கண்டதும் பெருமானையே கண்டதாகப் பேருவகை கொண்டார்.

''சென்றணைந்த ஆனாயர் செய்த விரைத்தாமம் என
மன்றல் மலர்த் துணர் தூக்கி மருங்கு தாழ்
சடையார் போல்
நின்ற நறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந்தையில் அன்பை உடையவர் பால்
மடை திறந்தார்.''

(பெ.பு; ஆனாய நாயனார் புராணம், 21)

தன்கையிலிருந்த வேய்ங்குழலில் சிவன் ஐந்தெழுந்து நாமத்தை இசைக்கத் தொடங்கினார். மனம் உருகி பக்தி பெருகி அவர், குழலில் சிவபஞ்சாட்சரத்தை வாசித்ததில்,

''இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசை மயமாய்
மெய்வாழும் புலன்கரணம் மேவியொன்றாயினவால்
மொய் வாச நறுங்கொன்றை முடிச்சடையார்
அடித்தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல் வாசனை
யுருக்க''

(பெ.பு. ஆனா. பு; 36)

மானும் புலியும் தம் வேறுபாடு மறந்து ஒன்றாயின அந்த இசையால்; அரவும் மயிலும் உறவு கொண்டன. மண் உலகம் விண் உலகம் இரண்டையும் ஆனாயரின் வேய்ங்குழலின் இசை வசமாக்கிக் கொண்டதுடன் சிவன் திருச்செவியையும் சென்றடைந்து ஈர்த்தது.

''மெய்யன்பர் மனத்தன்பின் விளைத்த இசைக்
குழல் ஓசை
வையம் தன்னையும் நிறைத்து வானம் தன் மயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொன்பொதுவில் நடம் புரியும்
ஐயன்தன் திருச்செவியின் அருகணையப்
பெருகியதால்''

(பெ.பு. ஆ.நா.பு. 37)

உள்ளம் மகிழ்ந்த பெருமான் தன்தேவியுடன் வந்தார். ''அஞ்செழுத்தால் தமைப் பரவும் இசை விரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர் நின்றார்.''

''உன் இசைக் கருவியுடன், என் உலகம் அடைவாய்; உன் குழலோசையை நல்லோர் கேட்க வேண்டும்'' என்று கயிலைக்கே அழைத்துச் சென்றார்.

''நமச்சிவாய'' எனும் ஐந்தெழுத்து மந்திரத்தைக் குழலில் இனிமையுடன் வாசித்ததற்கே தன் உடன் இருந்து என்றும் இசைத்திடும் பேற்றினை வழங்கிய திறத்தைக் காணும்போது, சிவபெருமானின் எளிவந்த வான் கருணை விளங்கும்.

அன்பு உடையவர் யாராயினும் அவருக்கு அருளுவதற்கு எளி வந்த பிரான் ஆகின்றார் சிவபெருமான்.

# கார்த்திகைப் பெருமான்

– திருமதி இரா. பத்மாவதி, பி.ஏ., பிஎஸ்சி., எம்.எட்.,

''காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடையுந்தி
தேட்டரு முதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே!''

துன்மதி ஆண்டில் திருப்பாணாழ்வார் அவதரித்தார். கலி பிறந்த 343 வருடத்திற்குப் பிறகு கார்த்திகை ரோகிணியில் திருமாலினது ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாய், உறையூரில் ஓர் கழனியின் கண் நெற்பயிரிடமாக அவதரித்தார். அவ்வழியே வந்த பாணர் ஒருவர் இத்தெய்வீகக் குழந்தையைக் கண்டு, எடுத்து, தம் மனைவியிடம் கொடுத்தார். அவ்வம்மையாரும் இவரைப் பாணர் என்று பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து மகிழ்ந்தார்.

இவர் திருமால் அருளால் தோன்றியவர். ஆதலால் இயற்கையிலேயே உலகப்பற்று அற்று, எம்பெருமானுடைய திருவடித் தாமரைகட்கு தம் மனத்தைச் செலுத்தி, தாம் வளரும் குடியினை நினைத்து, காவிரிக்கு அப்பால் நின்று தினமும் அரங்கனைப் பாடி வந்தார்.

பெருமாள் எடுத்த தசவாதாரத்தில் ஒன்பதாவதாகத் தோன்றியவர் கிருஷ்ணன். அபிநவ தசாவாதாரத்தில் ஒன்பதாவதாகத் தோன்றியவர் நம் திருப்பாணாழ்வார். இருவரும் ரோகிணி நட்சத்திரத்தில் அவதரித்தவர்கள். கண்ணன் குழலூதி விண்ணோரையும் மண்ணோரையும் மயக்கினார். திருப்பாணாழ்வாரோ கானம் செய்து, அரங்கனையே, மயக்கி, தன்னை எம்பெருமானே அழைக்கும்படி செய்தவர்.

மற்றைய ஆழ்வார்கட்கும் இவருக்கும் வேறுபாடு உண்டு. முதலாழ்வார்கள் மூவரும் வடமொழி வேதம் போன்று பரத்துவத்திலே ஊன்றி, அர்ச்சையை தொட்டுக் கொண்டு போந்தனர். குலசேகர ஆழ்வாரோ வால்மீகி முனிவரைப் போல இராமாவதாரத்தில், ஈடுபட்டு அர்ச்சாவதாரத்தை அனுபவித்தார். நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும், ஆண்டாளும், ஸ்ரீபராசர முனிவரையும், ஸ்ரீவேத வியாசரையும் போல ஸ்ரீகிருஷ்ண அவதாரத்திலே மண்டி அர்ச்சாவதாரத்தில் ஆழ்ந்தனர். தொண்டரடிப் பொடியாழ்வார் அரங்கனையே பாடிய போதும் தம்மை உணர்ந்து அனுபவித்தும், பரோபதேசம் செய்தும் போந்தார். திருப்பாணாழ்வார் மேலே கூறிய ஆழ்வார்களைப் போலல்லர். அர்ச்சாவதாரத்திற்கு மூலமான திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ள பெரிய பெருமாளையே மண்டிக் கிடந்தார். அவரையே அடிக்கும் தலைக்கும் செவ்விதமாக அனுபவித்துப் பாடினார். இவர்க்குப் பாடுவது பிறப்புரிமை ஆயிற்று.

நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் ''இசைகாரர்'' என்று கூறுவது இவருக்குப் பொருந்தும். 'வாய்த்த புகழ் பாணர்' என்று ஸ்ரீமந் மணவாள மாமுனிகளும்' 'பாண்பெருமாள்' 'நம் பாணநாதன்' என்று ஸ்ரீவேதாந்த தேசிகரும் இவரைப் போற்றியுள்ளனர்.

இவ்வாறு பாடுகையில் ஒருநாள் திருவரங்கச் செல்வனுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்கிற லோகசாரங்கர் என்னும் அந்தணர் தலைவர், தீர்த்தம் கொண்டு வர பொன்னித் துறையை அடைந்தார். கண்டார் பாணரை; அருவருப்புடன் 'எட்டச் செல், எட்ட செல்' என்றார் பலமுறை. பாணரோ இவ்வுலகத் தொடர்பை மறந்து இறைவனையே நினைந்து பாடிக் கொண்டிருந்ததில் தம்மை மறந்திருந்தார்.

''என்னே இப்புலையன்! அந்தணர்கள் வருவார்கள், நாம் இங்கு இருந்தால் தகுமோ? என்று எண்ணாமல், இங்கு வந்து இருந்ததோடு அன்றி நாம் கைதட்டிக் கூவி, அப்பால் செல் என்று கூறியும், அசையாமல் நிற்கின்றானே! இவன் என்ன செவிடனா? அன்றி இவன் சொல்லை நாம் என்ன கேட்பது என்று நிற்கின்றானோ?'' என எண்ணி ஒரு கல்லை எடுத்து வீசினார். அது பாணப் பெருமானுடைய நெற்றியில் பட்டு உதிரம் பெருகச் செய்தது. இதனால் அச்சீரிய ஞானச்செல்வர் தெளிவுற்று, முனிவர் எதிர்ப்புறம் நிற்பதைக் கண்டு மனமும் உடலும் நடுங்கி, அவ்விடத்தினின்று சென்று விட்டார்.

பிறகு லோக சாரங்க முனிவர் காவிரியில் நீர் முகந்து திருவரங்க நாதன் முன் சென்றார். அப்போது திருவரங்கநாதன் நெற்றியினின்று செந்நீர் பெருகி வந்தது கண்டு அவர் வருந்தினார். அன்றிரவு இறைவன் அவர் கனவில் தோன்றி, ''நீர் நாளை காலை நம் அன்பரான பாண் பெருமாளை இழிவாக நினையாமல், அவரை உம் தோள்களில் எழுந்தருளப் பண்ணிவாரும்!'' என்று நியமிக்க அவர் அவ்வாறே செய்து பேறு பெறக் கருதி, அத்திருப்பதியில் உள்ள யாவருக்கும் தெரிவித்து, அவர்களுடன் பாணர் வழக்கமாக நின்று பாடும் இடத்துக்குச் சென்று, அவர் திருவடிகளில் தெண்டனிட்டு பெருமானின் கட்டளையைக் கூறினார். பாணரோ தம் சாதி இழிவைச் சொல்லி மறுத்திட்டார். அப்பால் முனிவர் ''அது பகவத் நியமனம். தேவரீர், அதனை மறுத்தல் ஆகாது'' என்று கூற, பாண்பெருமான், ''நம் பெருமாள் திருவுள்ளம் அஃதாயின் அடியேன் அதனை மறுத்துக்



கூறுதல் கூடுமோ?'' என்று வாளா இருந்தார். லோக சாரங்க முனிவர் மகிழ்ச்சி கொண்டு, பாண் பெருமாளைத் தம்முடைய தோளில் ஏற்றிக் கொண்டு, தம்முடன் வந்த மறையவர் சூழச்சென்று திருவரங்கநாதன் முன்னிலை யில் விட்டனர்.

பாணர் பெருமாள் திருவரங்க நாதனுடைய அழகிய வடிவினைக் கண்டு, பிறவிக் குருடன் கண் பெற்றார் போல பெருமகிழ்ச்சி அடைந்து, கண்களினின்று அருவி என நீர் பெருக நின்றார். அவர் மனம் முதலில் திருவரங்க நாதனுடைய திருவடியிலே செல்வதாயிற்று,. ஆதலின் அவர் அமலன், ஆதிபிரான் என்று தொடங்கி முதலில் திருவடியைப் பாடினார். அப்பாசுரம் முதலாகப் பத்து பாசுரங்களைப் பாதாதி கேச மாலையாகப் பாடி, பிரணவத்தில் உள்ள அகரம், உகரம், மகரம் என்னும் மூன்று திரு எழுத்துக்களுள் முதல் எழுத்தாகிய அகரத்தை முதற் பாசுரத்தின் முதலிலும், 2ம் எழுத்தாகிய உகரத்தை இரண்டாம் பாசுரத்தின் முதலிலும், 3ம் எழுத்தாகிய மகரத்தை 3ம் பாசுரத்தின் முதலிலும், முறையே அமைத் துப் பாடினார்.

''அடியார்க்கு அவரை ஆட்படுத்தியவனும்'', திருமலையில் உள்ளவனுமான அரங்கனின் திருவடிகள் அவர் கண்களுக்கு இலக்காயின.

"அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர் கோன் விரையார் பொழில்
வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீண்மதிளரங்கத்
தம்மான் திருக்
கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன
ஒக்கின்றதே''

அ. 1

அடியார்க்கு அவரை ஆட்படுத்திய பரிமளம் மிக்க சோலைகளை உடைய விண்ணவர்கோன் திரு மலையில் உள்ளவனான வேங்கடவன் திருவரங்கத்து கோயி லிலே உள்ள திருவரங்கனின் திருவடித் தாமரைகள் தானே வந்து தம்மை அடிமை கொள்கின்றன என்கிறார். இவ்விடத்திற்குச் சேர முமுட்சுப்படியில் உள்ள இரண்டு வாக்கியங்கள் நினைவுக்கு வருகின்றன.

''பிராட்டியும் அவனும் விடினும்
திருவடிகள் விடாது திண்கழலா யிருக்கும்''

பிராட்டியார் சேதநனுடைய துன்ப நிலையைக் கண்டு மனம் இரங்கி அவனை அங்கீகரிக்கும்படி பெரு மானுக்கு புருஷாகாரம் (பரிந்துரைத்தல்) செய்வாராம். இப்படி இவனுடைய குற்றங்களைப் பகவானிடம் எடுத் துரைக்க மாட்டார். இருந்தபோதிலும் பகவான் மனத்தில் இவனை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்தை ஊன்றுவிப்ப தற்காக ஒரு கால் சில குற்றங்களை எடுத்துரைத்தால் பிராட்டியார் சேதநனைக் கைவிடலாம். இந்த சேதந னிடம் ஊன்றிய அன்பு கொண்ட பகவான், தனக்குள்ள வாத்ஸல்யம் முதலிய குணங்களால்

''என்னடியார் அது செய்யார்
செய்தாரேல் நன்று செய்தார்''

பெரி.தி. 4:9:2

என்று சேதநனை ஆதரிக்க முன்வருவான்.

இத்தகைய எம்பெருமானும் ஒரு சமயத்தில் கை விடுவதும் உண்டு. இப்படியாக சேதநனுக்கு நன்மை புரிபவராகிய பிராட்டியும் பெருமானும் கை விடினும் சேதநனை அப்புறம் செல்லாதவாறு அவன் திருவடிகளோ அகப்படுத்திக் கொள்ளும். இதனையே நம்மாழ்வார்

''வண்புகழ் நாரணன்
திண்கழல் சேரே'' என்று கூறுகிறார்.

திரு. 1:2:10

அடுத்த பாடலில் கரதூஷணர்களை முடித்த காகுத்தனுமான திரு அரங்கநாதனின் திரு பீதாம்பரத்தின் மீது தம் சிந்தனை சென்றது என்கிறார்.

''உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற
நிவந்த நீண்முடியன் அன்று நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்த வெங்கணைக்காகுத்தன் கடியார் பொழிலரங்கத்
தம்மான் அரைச்
சிவந்த ஆடையின்மேல் சென்றதாமென் சிந்தனையே''

அ. 2

மகிழ்ச்சியுடன் கூடிய மனத்தை உடையவனாய் மூவுலகங்களையும் அளந்தவனாய் பெரிய திருமுடி உடையவனாய் முற்காலத்தில் எதிர்த்து வந்த அரக்கர்களை உயிர் வாங்கிய ராமபிரானாய் இருப்பவன் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் அரங்கன். அவன் திருவரையில் சாத்திய பீதாம்பரத்தின் மேல் தம் நினைவு சென்றது என்கிறார்.

இடுப்பில் உடுத்திய சிவந்த பட்டாடையிலிருந்து அவர் கண்கள் உந்தி மேல் சென்றன.

''மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றான் அரங்கத்து அரவின்
அணையான்
அந்தி போல் நிறத்து ஆடையும் அதன் மேல்
அயனைப் படைத்த ஓர் எழில்
உந்தி மேலதன்றோ அடியேன்
உள்ளத்து இன்னுயிரே''

அ. 3

மந்திகள் பாய்கின்ற வேங்கடமலையில் வானவர்கள்துதி செய்ய நின்றவனை திரு அரங்களின் அந்தி போல் நிறத்து பீதாம்பரத்திலும் திருநாபி கமலத்திலும் தம் உள்ளம் நின்று உலாவுகின்றது என்கிறார்.

''இலங்கைக்கு மன்னனான இராவணனின் பத்து தலைகள் உதிருமாறு கணையைத் தொடுத்தவனும், குளிர்ந்த கடல் நிறமுடையவனும் ஆன அரங்கனின் உதர பந்தம் என் உள்ளத்துள் நின்று உலாவுகின்றது'' என்கிறார் இவர் நான்காம் பாட்டில்.

''சதுரமாமதில் சூழிலங்கை இறைவன் தலை பத்து
உதிரவோட்டி ஓர் வெங்கணையுய்த்தவனோத
வண்ணன்
மதுரமாவண்டு பாட மாமயிலாடரங்கத்தம்மான்
திருவயிற்று
உதர பந்தமென்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே.''

அ. 4

''பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றியென்னுள்
புகுந்தான்
கோரமாதவம் செய்தனன் கொல்அறியேனரங்கத்தம்
மான் திரு
ஆரமார்பதன்றோ அடியேனை யாட்கொண்டதே''

அ 5

''இத்தனை காலமாய் பாவங்களுக்கு இருப்பிடமாய் இருந்த என் நெஞ்சை, அப்பாவங்களை ஓட்டிவிட்டு தனக்கு இருப்பிடமாய்க் கொண்டான். இதற்கு நான் என்ன தவம் செய்தேனோ அறியேன்!'' என்பது ஐந்தாம் பாடல்.

''பெண்ணுலாஞ் சடையினானும்
பிரமனும் உன்னைக் காண்பான்
எண்ணிலா ஊழியூழி
தவஞ் செய்தார் வெள்கி நிற்ப''

என்கிறார், தம் திருமாலையில் தொண்டரடிப் பொடியாழ்வார்.

''தவம் புரியும் பெரியோர்களும் சிவபிரானும் பிரமனும் உன்னைக் காண்பதற்காக ஊழி ஊழிக்காலம் தவம் செய்தார்கள். அவர்களும் இப்பேறு பெறாமல் வருந்தி நிற்கின்றனர். இவ்வரிய பேறு அடியேனுக்குக் கிடைத்தது; எனது முயற்சியினால் நடந்தது அல்ல, திருமாலே இதற்குக் காரணமாக இருக்க வேண்டும்'' என்கிறார். பெரிய பிராட்டியாரையும், அழகிய முத்து ஆரத்தையும் உடைய திருமார்பு என்னை அடிமையாகக் கொண்டது என்கிறார்.

பிறையைச் சிரசில் அணிந்த சிவபிரானுடைய பாதகத்தைத் தீர்த்தவனும், வண்டுகள் வாழும் பொழில் நிறைந்த அரங்கத்தில் கண் வளர்பவனும், எல்லா அண்டங்களையும் உடையவனுமான என் அரங்கனின் திருக்கழுத்தன்றோ என்னை சம்சாரத்தினின்றும் உய்யச் செய்தது.''

''கையினார் சுரிசங் கனலாழியர் நீள்வரை போல்
மெய்யனார் துளபவிரையார் கமழ் நீண் முடியெம்
ஐயனார் அணியரங்கனார் அரவினணை மிசை
மேய மாயனார்
செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே!''

அ. 7

திருவாழி, திருச்சங்குகளை உடையவனாய், திருத்துழாய் மாலையால் முடியினில் அலங்கரிக்கப் பட்டவ னாய் திருவரங்கத்தில் அனந்தாழ்வான் மீது பள்ளி கொள்ளுபவனாய் நம் போன்றவர்களும் காணக்கூடிய அரங்கன் திருவாயின் அழகிற்கு இணை கிடையாது.

பவள வாயைக் கண்டவர் அடுத்து அவனது கண்களைக் காண்கிறார்.

''பரியனாகி வந்த அவுணனுடல் கீண்டு அமரர்க்கு
அரியவாதிப்பிரான் அரங் கத்தமலன் முகத்து
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி,
நீண்டவப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே!''

அ. 8

இரணியனின் சரீரத்தைக் கிழித்தவனும், தேவர் கட்கு அரியவனும், காரண பூதனும், தூய்மையான அழகிய மணவாளனுடைய திருமுகத்தில் கறுத்த நிற முடையவனாய் விசாலமாய் செவ்வரி படர்ந்து இருப்ப வையாய் (காது வரை) நீண்டிருப்பவையாய் பெருமை பொருந்திய கண்கள் என்னை மயக்கி விட்டனவே என் கிறார்.

யசோதையின் தன்மையைப் பெற்ற பெரியாழ் வாரும் குழந்தைக் கண்ணனின் கண் அழகில் ஈடுபட்டு,

''கண்கள் இருந்த வா - காணீரே!
கனவளையீர் வந்து காணீரே!

என்று மற்றவர்களையும் கூவி அழைக்கிறார்.

பரகால நாயகி பெருமானின் வனப்பை, ''கை வண்ணம் தாமரை, வாய் கமலம் போலும், கண்ணிணை யும் அரவிந்தம், அடியும் அஃதே'' என்கிறார். ஆண்டாள் அரங்கனின் பேரழகில் மயங்கி, ''என் அரங்கத்து இன்ன முதர் குழலழகர், வாயழகர், கண்ணழகர்'' என்கிறார்.

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட
வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''

அ. 10

என்று இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார். இவர் முன்னதாக வெண்ணெய் திருடிய கண்ணனை அனுபவிக் கிறார். அவனைச் சேவிக்கப் பெற்ற கண்கள் வேறு ஒன்றையும் பார்க்க மாட்டாது.

''ஆல மாமரத்தினிலை மேலொரு பாலகனாய்
ஞாலமேழுமுண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்ல
தோரெழில்
நீல மேனி ஐயோ! நிறை கொண்டது
என் நெஞ்சினையே''

அ. 9

'ஆலிலை மேல் ஒரு சிறு பிள்ளையாகி. ஏழு உலகங்களையும் திருவயிற்றிலே வைத்து உண்டவனும் திருவனந்தாழ்வான் ஆகிற பாம்பின் மேல் கண் வளர்ந் திருப்பவனும் ஸ்ரீ ரங்கநாதனின் மார்பில் சிறந்த இரத் தினங்களால் செய்யப்பட்ட மாலைகளையும், முத்தாரங் களையும் ஒப்பற்ற அழகையும் உடைய திருமேனியானது என் நெஞ்சைக் கொள்ளை கொண்டதே! ஐயோ, இதற்கு நான் என் செய்வேன்!'' என்கிறார். இவ்வாறு 'அமல னாதிபிரான்' அருளிச் செய்தவுடனே பெரிய பெருமாள் அத்திருமேனியோடு ஆழ்வாரை அங்கீகரித்தருள அனை வரும் காண, அப்பிரானது திருமேனியிலே கலந்தார் என்று பெரியோர்கள் அருளிச் செய்துள்ளனர்.

இவர் திரு நட்சத்திரம் கார்த்திகையில் ரோகிணி.

''காண்மின் என்று காசினியீர்
வாய்த்த புகழ்ப் பாணர்
வந்து திப்பால் - ஆத்தியர்கள்
அன்புடனே தான் அமல
னாதி பிரான் கற்ற தற் பின்
நன்குடனே கொண்டாடும் நாள்''

(உபதேச ரத்தின மாலையில் திருபாண் ஆழ்வார் உலகு வந்து உதித்த திருநாளை இவ்வாறு சிறப்பிக்கிறார்)

உலகத்தவர்களே ,கார்த்திகை மாதத்தில் ரோகிணி நட்சத்திரத்தில், புகழை உடைய திருப்பாணாழ்வார் வந்து தோன்றினார். அதனால் ஆஸ்திகர்கள் பக்தியோடு அறிய வேண்டிய அர்த்தங்களை எல்லாம் அழகாக அமைத்து பத்தே பாசுரங்களில் அருளிச் செய்தவர் என்றும், அமல னாதி பிரான் கற்கப் பெற்றோம் என்றும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் நாள் கார்த்திகை ரோகிணி நாள் ஆகும்.

அனைத்து ஆழ்வார்களும் பல பாடல்களைப் பாடியிருப்பினும், திருப்பாணாழ்வார் நாவன்மையால் பத்து பாடல்களில் சேவித்து எல்லா ஆழ்வார்களிலும் இவர்தான் பெருமாளை எப்படிச் சேவிக்க வேண்டும் (பாதாதிகேசம்) என்று அளித்துள்ளார்.

இவ்வாழ்வாரைப் போலவே நாமும் அவன் திருமேனி அழகில் ஈடுபட்டு அவன் பால் நம் சிந்தையைச் செலுத்தி வாழ்க்கை எனும் பெரும் கடலைக் கடந்து அவன் தாள் பற்றும் பேறு பெறுவோமாக!

அப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய திருப் பாணாழ்வார் வாழித் திரு நாமம்.

''உம்பர் தொழும் மெய் ஞானத் துறையூரான்
வாழியே!
உரோகிணி நாள் கார்த்திகையிலுதித்த வள்ளல்
வாழியே!
வம்பவிழ்தார் முனி தோளில் வந்த பிரான் வாழியே!
மலர்க் கண்ணில் வேறொன்றும் வையா தான் வாழியே!
அம்புவியில் மதிளரங்கர் அகம் புகுந்தான் வாழியே!
அமலனாதிபிரான் பத்தும் அருளினான் வாழியே!
செம்பொன்னடி முடியளவும் சேவிப்போன் வாழியே!
திருப்பாணன் பொற் பாதங்கள் செகத்தலத்தில்
வாழியே!''

# கம்பரின் இராமாவதாரம்

— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

## 2. அயோத்தியா காண்டம்

### 2. காரியக் கருவிகளான கூனியும் கைகேயியும்

பண்டைய காலத்தில் ஒவ்வொரு அரசனுக்கும் குரு ஒருவர் பக்கபலமாக இருந்து தக்க யோசனைகள் கூறினார். தசரதனுக்கு ஒரு வசிட்டரும், சனகருக்கு ஒரு சதானந்தரும் இருந்தனர் என்பதே இதற்குச் சான்றுகள் ஆகும். அரசனாகப் போகும் இராமபிரானை அழைத்து வசிட்டர் பல நீதிகளை போதித்தார். ''வேதம் அறிந்தவர் களை வணங்கு. எவரையும் பகையாதே. மனிதனின் மனத்தை மாற்றக் கூடிய நெறி தவறிய மாதரை மனத் தினும் எண்ணாதே'' என்றெல்லாம் நீதிபோதனை செய் தனர். அப்போது, அயோத்தியானது இராமன் முடி சூடும் விழாவைக் கொண்டாடுவதற்காக அலங்கரிக்கப்படும் நேரத்தில் கூனி தோன்றினாள். கொடிய இராவணனை அழிக்க வந்ததே இராமாவதாரம். எனவே இராவணனின் பாவம் அவனை அழிக்க இராமபிரானைக் காட்டிற்கு அனுப்ப வந்தது எனக் கம்பர் தேவ காரியம் பழுதாகா மலிருக்க கூனி தோன்றினாள் என்கிறார். **இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல்** என்கிறது கம்பன் வாக்கு. கூனியின் முதுகில் களிமண் உருண்டையை அடித்து இராமபிரான் விளையாடியதால் கூனி கோபம் கொண்டு திருமுடி சூடுவதைத் தடுக்க வந்தாள் என்பர். இராமபிரான் யாவருக்கும் கருணை செய்யக் கூடியவர். **(கூனி கூன் போக உண்டை செறித்தார்)** கூனியின் கூனை நிமிர்த்திச் சரி செய்வதற்காக களிமண் உருண்டையை அடித்தார் என்பது கம்பர் கருத்து.

இராமாவதாரம் போல கிருஷ்ணாவதாரத்திலும் ஒரு கூனிவந்தாள். அவள் கம்சனுக்குப் பூசிக்கொள்ளச் சந்தனம் கொண்டுவந்த போது, வழியில் அதைக் கண்ண பெருமான் கேட்க கண்ணனுக்குச் சந்தனம் அணிவித் தாள். மகிழ்ச்சி கொண்ட கண்ணன் அவள் கூனை நிமிர்த் தான் என்பது பெரியாழ்வார் கூறும் வரலாறு.

நாறிய சாந்தம் நமக்கிறை நல்கென்ன
தேறி அவள் திரு உடம்பில் பூச
ஊறிய கூனினை உள்ளே ஒடுங்க : அன்று
ஏற உருவினாய் அச்சோ! அச்சோ.


(பெரியாழ்வார்)

பேதையான கூனி இராமபிரானின் கருணையை அறியாது உடலிலிருந்த கூனலைப் போல் உள்ளத்திலும் கூனல் கொண்டு இராமபிரான் பட்டாபிஷேகத்தைக் கெடுத்தாள் என்பது குறிப்பு.

இராமபிரானின் திருமுடிசூட்டு விழாவைக் கெடுப்பதற்கு கைகேயியைத் தூண்ட வந்தாள் கூனி. கைகேயி உறங்கிக் கொண்டிருந்தாள். அப்போது கூட தூங்கும் அவள் கடைக்கண்களில் கருணை பொழிந்தது **கண்ணளி பொழியப் பொங்கணை மேற்கிடந்தாள்** என்கிறது கவிஞரின் வாக்கு. அத்தகைய கைகேயியின் திருவடிகளைத் தீண்டினாள் கெட்ட ஒரு கிரகம் போன்ற வள். கூனியைக் கெட்ட கிரகம் போன்றவள் என்றாரே தவிர அவள் ஒரு கெட்ட கிரகம் என்று கூறவில்லை. **காலக்கோளனாள்.** தன் கால்களை யாரோ தீண்டுவதை யறிந்தாள் தெய்வீகக் கற்புடையவள். தன் கணவனைத் தவிர எவர் தீண்டினாலும் மாறுபாடு அறியக்கூடிய தெய்வக் கற்பினாள் என்றார். ''ராகு எனும் பாம்பு தன்னை விழுங்கப் போகிறது. (கிரகணம் பிடிக்கப் போகிறது) என்ற ஆபத்தையறியாமல் உலகிற்கு ஒளி வீசி இன்ப மூட்டும் சந்திரனைப் போன்று, உனக்கு வரப்போகும் தீமையை அறியாமல் உறங்கிக்கொண்டா யிருக்கிறாய்? என்றாள் கூனி. **விடம் போன்றவள்** அவ் வாறு கூற ''பிற ரால் தீங்கு நேராத வண்ணம் தருமந் தவறாத என் மக்கள் (நால்வரையும் குறித்தபடி) உள்ளனர். வேதத்தை நிகர்த்த தருமவானான இராமபிரானைப் பெற்ற எனக்கு என்ன ''இடர்வரும்?'' என்றாள் கைகேயி. அது கேட்டு மேலும் கோபமடைந்த, **சூழ்ந்த பாவம் போன்ற கூனி,** ''உன் பெருமையும் செல்வமும் நீங்கியது. புத்தியுள்ள கோசலைக்கு நல்வாழ்வு கிடைத்து விட்டது'' என்றாள். ''நான் தசரதனின் பட்டமகிஷி. கௌசலையும் அவ்வாறே. எனக்கும் தரும உருவமான பரதன் மகனாகப் பிறந்துள்ளான். கௌசலைக்கு மாத்திரம் என்ன அதிகப் பெருமை கிடைத்து விட்டது? என்றாள் கைகேயி. ''உலகமே கைகொட்டி நகைக்க, தாடகையைக் கொன்றவனான இராமபிரான் முடி சூடி, அயோத்திக்கு அரசனாகப் போகிறான்'' என்றாள் கூனி.

கைகேயி, இராமன் முடி சூடப் போகிறான் என்ற செய்தி கேட்டு எல்லாவற்றையும் மறந்தாள். பெற்ற பாசத்தைக் காட்டிலும் வளர்த்த பாசம் அதிகமன்றோ! அளவிட முடியாத ஆனந்தக் களிப்பில், தன்னையறி யாது, ஒரு அழகிய ரத்தினமாலையை கூனிக்குப் பரிசாக எடுத்து நீட்டினாள்.

தெழித்தனள் : உரப்பினள் : சிறுகண் தீயுக
விழித்தனள் : வைதனள் : வெய்துயித்தனள்



அழித்தனள் : அழுதனள் : அம்பொன் மாலையான்
குழித்தனள் நிலத்தை அக்கொடிய கூனியே

சீறிச்சினந்து அலறிப்பெரு மூச்சுவிட்டு அந்தப் பொன்மாலையைத் தரையில் ஓங்கி அடித்துத்தரையே குழிவிழுமாறு செய்து விட்டாள் என்கிறது இச்சித்திரக் கவிதை. ''நீஉன் சக்களத்தியருக்கு அடிமையாகிவிடு. ஆனால் நான் அவர்களுடைய தாதியர்களுக்கு அடிமையாக மாட்டேன். அந்தச் சிவப்பியும் (சீதாபிராட்டியும்) கறுப்பனும் (இராமனும்) சிம்மாதனத்திலிருக்க உன் மகன் தரையில் அமர்ந்திருக்க அது கண்டு மகிழும் காரணம் என்ன? இந்த வசை கூட சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும் என்ற அழகிய சொற்களால் கூறப்படும் போது தமிழில் கடுமையான வார்த்தைகளே கிடையாது என்ற எண்ணம் உறுதிப்படுகிறது. ''என் கண்ணே! பரதா! உன் தந்தை கொடியவன். உன்னை உன் பாட்டன் வீட்டிற்கு அனுப்பி நீ இல்லாத நேரத்தில் இராமனுக்கு முடிசூட்டப்பார்க்கிறான். உன் தாயும் ஒன்றும்தெரியாத தீயவளாக இருக்கிறாள்'' என நாடகமாடுகிறாள். ''அரசியாகப் பிறந்து வளர்ந்து பேரரசியான நீ அறியாமையால் துயரமடையப் போகிறாய். பரதனுக்குள்ள அழகும் கல்வியும் நற்குணங்களும் வீணாகிறதே!'' என்றெல்லாம் பேசிய கூனியைப் பார்த்து கைகேயி ''இப்படியெல்லாம் பேசினால் நான் மயங்கிவிடுவேன் என எண்ணுகிறாயா? நீ எனக்கு நல்லவள் இல்லை. என் மகன் பரதன் உன்னை நல்லவள் என எண்ண மாட்டான். தரும வழியில் பார்த்தால் உனக்கே நீ நல்லவளில்லை. மயில் முட்டையிட்டுக் குஞ்சு பொறித்தால் முதலில் தோன்றும் குஞ்சின் கொண்டை தங்கநிறமாக இருக்கும். அதுபோல் சூரிய வம்சத்தினர் மக்களிலும் மூத்தவர்தான் பொன் மகுடம் புனைவார்கள்.

மயில் குலத்து உரிமையை மனுமுதல் மரபை
செயிறுறப்புலைசிந்தையினால் என் சொனாய் தீயோய்!

எனச் சீறி ''நீ இங்கிருந்து போய்விடு. நீ என் தோழியென்று உன்னை மன்னித்தேன். தப்பித் தவறி எவர் காதிலாவது இம்மொழி விழுந்தால் கூட நீதியல்ல போய்விடு'' என்றாள். மயில்பற்றிக் கம்பன் கூறும்போது அப்புலவர் பெருமான் அறியாத செய்தியே இருக்காது என அப் புலவனின் அறிவாற்றல் நம்மை வியக்கவைக்கிறது.

இது கேட்டுக் கூனி போகவில்லை. ''உனக்கு நன்மையைக் கூறுவேன். அஞ்சவேமாட்டேன். மூத்தவனிருக்க இளையவன் மகுடம் சூடக்கூடாது என்றால் வயதில் மூத்தவரான தசரதர் நன்றாக உள்ளபோதே இளைஞனான இராமனுக்கு இப்போது ஏன் முடி சூட்ட வேண்டும்? தருமமே உருவானவர்கள் கூட ஒரு பதவி செல்வாக்கு முதலானவை கிடைத்து விட்டால் மாறிவிடுவர். நல்ல எண்ணமுடையவரானாலும் தன்னையறியாமலே உன் மனம் துன்புறும்படி நடப்பர். இராமனுக்குப் பின் அவனுடைய மக்களுக்கு அரசு கிடைக்கும். உனக்கும் உன் மக்களுக்கும் என்ன நன்மை? உன் பிறந்த வீட்டவர் இப்போது உன் உயர்ந்த நிலை கண்டு நம்மகள் பட்டத்தரசியாக விளங்குகிறாள் என மகிழ்ச்சியடைகிறார்கள். இராமன் மன்னவனாகி விட்டால் உன் பதவி என்ன ஆவது? இன்று தசரதர் உள்ளார்; அவர் இல்லாவிட்டால், ஜனகர் உன் தந்தையின் அரசைக் கைப்பற்றி இராமபிரானை தன் மருமகனுக்குக் கொடுக்கலாமே! இப்போது, உன்னிடம் வரும் ஏழைகளுக்கு வாரி வாரி அளிக்கிறாய்! இராமபிரான் மன்னவனான பின் ஒரு ஏழைக்கு உதவும் அதிகாரம் கூட உனக்குக்கிடையாது.

எவராவது உன்னிடம் உதவி வேண்டி வந்தால் கௌசலை யிடம் கையேந்தி வாங்கி, வருவோருக்கு அளிப்பாயா? அல்லது நம் சக்களத்தியிடம் கையேந்தும் நிலை வந்து விட்டதே என ஏங்கி மயங்கித் துயரமடைவாயா?'' என்றாள். தன் அதிகாரம் பிறருக்குப் போய்விடும் என்ற எண்ணம் ஏற்படவும் கைகேயியின் **தூயமனம்** திரிந்து **தீயமனமாகி** விட்டது.

தேவர்கள் செய்த புண்ணியமும் அரக்கர்கள் செய்த பாவமும் தான் இராமாவதாரம் ஆவதற்கே காரணம் **விரிந்திடு தீவினை செய்த வெவ்விய தீவினையாலும் அருங்கடையின் மறையறைந்த அறஞ்செய்த அறத் தாலும்** என்று முன்னமே கவிஞர் கூறினார். அதே முறையில்

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய தவமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழிமடமான்

எனக் கைகேயி மனம் மாறக் காரணம் கூறினார். **இராவணன் செய்த பாவமே** அவனை அழிக்க இராம பிரானைக் காட்டிற்கு அனுப்ப கூனியைத் தூண்ட, அதே காரணம் **தூயமனத்தினளான** கைகேயியைத் **தீயமனத் தினள் ஆக்கிவிட்டது**. கூனியோ கைகேயியோ கொடிய வரல்லர். இது தெய்வச் செயல் என்பது குறிப்பு.

மனம் மாறிய கைகேயி ''இப்போது பரதனுக்கு அரசு கிடைக்கும் படி செய்ய உபாயம் என்ன?'' எனக் கேட்கிறாள். சிறு வயதில் கைகேயி தன் அரண்மனையில் வந்து தங்கிய துர்வாச மகரிஷிக்குச் சேவை செய்தாள். அப்போது ஒரு நாள் அறியாச் சிறுமியான அவள் உறங்கிக் கொண்டிருந்த துர்வாசரின் முகத்தில் கரியை அறைத்துப் பூசிவிட்டாள். உறக்கம் நீங்கி எழுந்த துர்வாசர் தன் முகத்தில் கைகேயி கரியைப் பூசினாள் என அறிந்து சீறி ''என் முகத்தில் கரி பூசினாயல்லவா? உலகத்தில் உன் முகத்தில் கரி பூசியமாதிரி பழி ஏற்படட்டும்'' எனச் சபித்தார். சிறிது நேரம் கழித்துக் கோபம் தணிந்து, ''அறியாது சிறிய குழந்தை செய்த குற்றத்திற்குச் சாபம் கொடுத்து விட்டோமே'' என இரங்கி ''கைகேயி! உனக்கு முன் அளித்த சாபத்தை என்னால் மாற்ற முடியாது. ஒரு நன்மை செய்கிறேன். உன் கையில் உள்ள ஆட்காட்டி விரல் என்ன நேர்ந்தாலும் உடையாது வச்சிரம் போலி ருக்கும். அது உனக்கு உதவும்'' எனக் கூறிப் போந்தார்.

சிறிது காலத்திற்குப் பின் கைகேயி தசரதனைத் திருமணம் செய்து கொண்டாள். கைகேயி தேர் ஓட்டு வதில் வல்லமை பெற்றவள். சம்பரன் எனும் அசுரன் தசரதனிடம் போருக்கு வந்தான். கைகேயி தானே தேரைச் செலுத்திக் கொண்டு சென்றாள். திடீரெனத் தேர்பக்க வாட்டில் அசைந்தது. கடையாணி கழன்று விட்டது. இதையறிந்து திடுக்கிட்ட கைகேயி தேரினின்றும் குதித்து, தன் ஆட்காட்டி விரலைக் கடையாணியிருக்கு மிடத்தில் சொருகினாள். தேர் காப்பாற்றப்பட்டது. தசரதரும் வெற்றி பெற்றார். தன் மனைவி தன்னைக் காப்பதற்காகத் தன் விரலையே கடையாணியாகக் கொடுத்துத் தன்னைக் காத்தாள் என அறிந்து ''கைகேயி! உனக்கு இருவரங்கள் கொடுக்கிறேன் கேள்!'' என்றார். ''எனக்குத் தேவையான போது கேட்டுக்கொள்வேன்'' என்றாள் கைகேயி.

இதை நினைவில் கொண்ட கூனி ''அந்த இரண்டு வரங்களில் ஒன்றாக அரசை வாங்கிக் கொள். மற்றொரு வரத்தினால் இராமன் பதினான்கு வருடங்கள் காடு செல்லும்படி வரங்கேள்'' என்றாள்.

*''கலியுகத்தில் 12 வருடங்கள் ஒரு சொத்தை அனுபவித்தால் அனுபோகபாத்யதை* **(Adverse Possession)** *என்ற பெயரில் அனுபவித்தவருக்குச் சொந்த மாகி விடும் என்பது சட்டம். துவாபர யுகத்தில் இதே அனுபோக பாத்யதை 13 வருடங்களாக இருந்தது. அத னாலேயே துரியோதனன் பஞ்ச பாண்டவர்களை 13 வருடங்கள் வனவாசம் செய்ய அனுப்பினான். திரேதா யுகத்தில் அனுபோகபாத்யதை 14 வருடங்களாக இருந்த படியால் இராமபிரானை 14 வருடங்கள் காடு செல்ல யோசனை கூறினாள்'' எனக் கூறினார் அடியே னுடைய ஆசிரியர் திரு. N.R. கிருஷ்ண சுவாமி ஐயங்காரவர்கள்!* **கூனியின் மூளை கோணல் மூளையா யிருந்தபோதும் சிறிது சட்ட நுணுக்கம் தெரிந்ததாக இருந்தது** என்பது குறிப்பு.

இராமபிரானுக்குத் திருமுடி சூட்டப்போகிறார் என்ற செய்தி கூறிய போது ஒரு தங்கமாலை பரிசளித்த கைகேயி, இராமன் வனவாசம் அனுப்ப யோசனை கூறிய கூனிக்கு **நவரத்தினங்கள் இழைத்தமாலைகளையும்** பல பரிசுகளையும் கொடுத்து அனுப்பினாள்.

கூனி போன பின் மலர்கள் நிறைந்த மெத்தை யினின்றும் இறங்கித் தன் தலையிலிருந்து மலரையும் எடுத்துக் கசக்கி எறிந்தாள். கைவளைகளை எறிந்து நெற்றியிலிருந்த திலகத்தையும் அழித்துக் கொண்டாள். அணிகலன்களைக் கழற்றி எறிந்து கண்களிலிருந்து மை கரையும்படி கண்ணீர் விட்டுக் கொண்டு, நாட்டின் திரு மகளான சீதாபிராட்டி நீங்கப்போகிறாள் என, இளையவ ளான சீதேவி நீங்கினால் அவளது மூத்தவளான மூதேவி கிடக்கிறாள் என எண்ணும்படி தரையில் விழுந்து புரண்டு கிடந்தாள் கைகேயி.

*(தொடரும்)*

# ஸ்ரீ சாரதா புஜங்கம்

**(தவத்திரு சந்திரசேகரபாரதி சுவாமிகள் அருளிச் செய்தது)**

**- ஸ்ரீ பாரதி தீர்த்ததாசன்**

(முன் தொடர்ச்சி)

காளை எவ்வாறு எந்த விதமான அச்சமுமில்லாமல், ஓடியாடி அட்டகாசம் செய்கிறதோ, அத்துணை அட்டகாசத்தையும் இளமையில் மனிதன் செய்வதால் இளமைப்பருவத்தைக் காளைப்பருவம் என்பர். இளமைச் செருக்கு அறியாமையை உண்டாக்கி அறிவின் திறனைக் குறைத்து விடும். பிறர் நமக்கு நன்மை செய்வர் என்ற எண்ணத்தைக்கூடக் குறைத்துவிடும். அழகு, செல்வம் இரண்டும் செருக்கை உண்டாக்கிவிடும். அழகு, செல்வம் இரண்டும் நிலையில்லாதவை.

சுவரில் மண்பூசிச் சமப்படுத்திச் சித்திரம் வரைகிறோம். சித்திரம் அழகாக உள்ளது. ஆனால் உள்ளே இருப்பது வெறும் மண்தானே. சீழ், ரத்தம், மலம், நீர் முதலான அழுக்குகளும் நாற்றமும் நிறைந்ததே உடல். உடலிலிருந்த சட்டையை ஒரு முறை போட்டு கழற்றும் போது வெளிப்பக்கம் வெள்ளையாயிருப்பினும் உள்ளே அழுக்கையே காண்கிறோமன்றோ? **ஊற்றைச் சரீரம்**, ஆபாசக் கொட்டில் என உடலைக் கூறுவார் பட்டினத்தார். **ஒளிர்பேருடல் உட்புறத்தினையே திருப்பிடில் ஓங்கலாம் மலக்காடு** என்பர் வேதநாயகம்பிள்ளை. எனவே அழகுடையோம் என்ற செருக்கினால் பயனில்லை.

உன்னைவிட்டுச் சென்று விடுவோம் எனக் கூறுவதாலே, பொருளைச் **செல்வம்** என அழைத்தனர். உன்னிடம் தங்கமாட்டோம் என்பதனாலே **தங்கம்** என அழைத்தனர். நாம் பிறக்கும் போது பற்களோடு பிறக்கவில்லை. இறக்கும் போதும் பற்களை இழந்து, வந்த மாதிரியே பொக்கை வாயுடன் போகிறோம். நடுவில் வந்தவை நடுவிலேயே போய் விட்டன. அதுபோல் நடுவில் வந்து மறையும் செல்வத்தையடைபவருக்கு ஏன் செருக்கு?

இடையிற் கோவணம் இன்றி இங்கு உதித்தோம்:
அவ்வாறே
கடையில் வெறுங்கையோடு கழிகுவோம்:
நடுவிற்சேரும்
உடைமையால் பெருமை யென்னோ

என்கிறது நீதி நூல்.

கல்விகற்றோம் என்ற செருக்கினாலும் பயனில்லை. பிற பெரியோர்கள் எழுதியருளிய நூல்களைப்படித்து நாம் ஏன் கர்வப்பட வேண்டும்? ''நாமா எழுதினோம்? நம்மைக்காட்டிலும் படித்தவர்கள் உள்ளனர். அதுமட்டுமா? செல்வம் நம்மை விட்டு நீங்குவது போல், வயது முதிரும்போது, மறதி எனும் காலன் நம் அறிவையும் கல்வியையும் மறைத்துவிடுகின்றது. எனவே இளமையில் செருக்கற்று வாழ்வதுடன், காமம் என்ற பெண்ணாசையும் ஏற்படாத வண்ணம் நம் இதயத்தில் தெய்வத்தையே வைத்து வழிபட்டு வாழ வேண்டும்.

இளமையில் அம்மையை வணங்காது வாழ்ந்தது குற்றமே. ஆயினும் தாய் தன் குழந்தையை வெறுத்து நீக்கலாமா? தந்தை கோபித்தால் தாய் சமாதானப்படுத்தி மகனுக்கு அருளுமாறு செய்தல் வழக்கம். இறைவனும் இறைவியும் தனித்திருக்கும் நேரத்தில் பக்தனுடைய குறைகளைக் கூறி அவரது அருளை அடியவன் பெற உதவ வேண்டாமா?

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து
நீமுத்தந்தா என்று அவர் கொஞ்சி மகிழும் நேரத்தில்
வேய்முத்தரோடு என் குறைகளெல்லாம் மெல்ல
மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்திடுமோ? நெல்வேலி வடிவன்னையே

என அம்மையிடம் கேட்கிறார் பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்.

அழகு செல்வம் கல்வி இவற்றால் தன் நிதானம் தவறி அம்மையை வணங்க மறந்து விடக் கூடாது. இளமையில் உன்னை வணங்காத குறையைப் பொறுத்தருள வேணும் என்கிறார் ஸ்ரீ சந்திரசேகரபாரதி மகா சுவாமிகள்.

மதநெஞ்சின் வாலிப காலத்தின் உன்றன்
மலரடிகள் இவ்வடியன் வணங்கவிலை! இலையே
விதியன்புஅனையே என் பிழை நீ பொறுப்பாய்!
வெறுப்பெய்தலில்லை தன் செம்மல் பால் அம்மை.

★★★

மூப்பு மனிதனின் பெண்ணாசையைக் குறைத்து விடும். இறைவனையடைய அது நல்லதருணம். ஆனால் மனிதன் அந்த நல்ல தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளாது தான் இறந்து விடுவோமோ? மனைவி இறந்துவிடுவாளோ? தன் குழந்தைகள் நலமாயிருக்க வேணுமே! அப்படியிருக்கும்போது அவர்கள் தன்னை மதியாமலிருந்து விடுவார்களோ என்றெல்லாம் கவலைப்படுகிறான். நூற்று எழுபது வயது நிறைந்தும் வேறு நினைவேயில்லாமல் வாழ்ந்தவரான திருக்கோவிலூர் ஞானானந்த சுவாமிகளை ஏன் நாம் பின்பற்றக் கூடாது?

மூப்பு தளர்ச்சியை உண்டாக்கிவிடுகிறது. கோயிலுக்கு நடந்து செல்ல முடியவில்லை. சென்றாலும் விழுந்து வணங்க முடியவில்லை. பற்களையிழந்ததால் இறைவன் நாமம் பாட முடியவில்லை. கண்கள் மங்கிவிட்டதால் இறைவன் திருவுருவை தரிசிக்க முடியவில்லை. காது மந்தமாகி விட்டது. இறைவன் திருநாமத்தைக் கேட்க முடியவில்லை. மூப்பின் கொடுமையை **அரும்பெரும் மூப்பு, எரிகின்ற மூப்பு** என்றெல்லாம் கூறுவார் கம்பர். இதனாலேயே மூப்பு ஏற்படுமுன் இறைவனை நினை என்றனர் பெரியோர்.

முக்காலுக்கு ஏகாமுன் முன்நரையில் வீழாமுன்
அக்காலரைக் கண்டு அஞ்சாமுன் - விக்கி
இருமாமுன் மாகாணிக்கு ஏகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரை ஓது

- காளமேகப்புலவர்

முக்கால், அரைக்கால், அரை, காலரை, மாகாணி என்ற கணிதச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. **முக்காலுக்கு ஏகாமுன்** - மூன்றாவது காலாகக் கையில் கம்பூன்றி நடக்கும் முன்; **முன் நரையில் வீழாமுன்** - தலைமுடி நரைக்கும் முன்; **அக்காலரைக் கண்டு அஞ்சாமுன் :** யமனைக் கண்டு பயமடையும் முன்; **விக்கி இருமாமுன் :** விக்கலும் இருமலும் வருமுன்; **மாகாணிக்கு ஏகாமுன் :** சுடுகாடு என்னும் நிலத்திற்குச் செல்லுமுன் **கச்சி ஒரு மாவின் கீழரை ஓது:** காஞ்சித் தலத்தில் ஒரு மாமரத்தடியில் உள்ள இறைவனை நினைத்துப் பாடு என்றார்.

வயது முதிர்ந்தவர்களின் பேச்சில், அவர்கள் அறியாது பேசும்போது, நம்மையறியாமல் நகைக்கும்படியான செய்திகளும் வரல் உண்டு. விளக்கேற்றுவதற்காக ஒரு சிறுவன் தீப்பெட்டியைத் தேடினான். அங்கிருந்த கிழவர் தன்னையறியாது'' இருட்டில் எப்படியப்பா தேடுவாய்? விளக்கை யேற்றி அந்த வெளிச்சத்தில் தீப்பெட்டியைத் தேடி எடு என்றார். மூப்பின் காரணமாக உண்டான ஞாபக மறதியின் விளைவு!

எனவே வயது முதிர்ந்த காலத்தில் உனை வணங்காத குற்றத்தை பொறுத்தருள்! பூமியையும் பொறுமையினால் வென்ற தாயே! என்கிறார் ஸ்ரீ ஜகத்குரு.

பற்று நோயால் தளர்வினால் மூப்பில் நின்றன்
பாதங்கள் தேனிக்கிலேன் சாரதாம்பா!
குற்றங்கள் யாவும் மன்னித் தருள்வாயே
குவலயம் நோன்றலில் வென்ற என் தாயே!

★★★

இறைவனது திருவடிகளே பக்தனுக்கு கதி. இராமலிங்க சுவாமிகள் தன் மனத்தை நோக்கி ''ஏன் ஒன்றுமில்லாதவர் போல் வாடவேண்டும்? நமக்கென்ன குறை? நீ என்னுடன் வா? திருவொற்றியூர் இறைவனையடையலாம்!'' என்கிறார்.

ஓடல் எங்கனும் நமக்கென்ன குறைகாண்!
உற்ற நற்றுணை ஒன்றுமில்லார் போல்
வாடல் நெஞ்சமே; வருதி என்னுடனே!

என இறைவன் தரிசனத்திற்கு அழைக்கிறார். ஆனால் மனம் நம் வசப்படாது. எத்தனையடக்கினாலும் மிரண்டு ஓடும் காளைபோல் நம்மை விட்டு ஓடி விடும். கசப்பான காயையும் இனிப்பாக்கி விடலாம். விடமும் அமுதமாகலாம். கானலை நீராக்கலாம். பாவத்தையும் புண்ணியமாக்கி விடலாம். இறைவனே! கெட்டுப்போன என் மனம் உன் பெருமையை அறியக் கூடியதாக மாற மறுக்கிறது'' என்கிறார்.

கைக்கின்ற காயும் இனிப்பாம்; விடமும் கன அமுதாம்!
பொய்க்கின்ற கானலும் நீராம்: வன் பாவமும்
புண்ணியமாம்
வைக்கின்ற ஓடும் செம்பொன்னாம்: என் கெட்ட
மனது நின் சீர்
துய்க்கின்ற நல்ல மனதாவதில்லை என்
சொல்லுவேனே

என்கிறார்.

நான் உன் வசமானவன். என் மனமோ என் வசமில்லாது பெண்ணையும் பொன்னையும், பதவியையும் நோக்கி ஓடுகின்றதே! புருஷனுக்கு அடங்காத பெண்மாதிரி ஓடுகின்றது. நெஞ்சு கல்லாகவும் இரும்பாகவுமே மாறுகிறது. அடங்கக் கூடிய மனத்தை ஸ்ரீ ஆதிசங்கராசாரியார் ஒரு நல்ல குதிரை போன்றது என்கிறார். என் மனமான குதிரையில் நீ ஏறி வந்தருள்க! என அழைக்கிறார்.

நல்ல இலக்கணம் உடைத்து : நசையும் நடை யுடைத்து:
செல்லும் விரைந்து: இங்கிதங்கள் தேறுவது: குற்றம்
இல்லது: மங்களம் நிறைந்தது: என் மன மாஊர்க:
வெல்லும் விடையாய்! இறைவ! வேளை முனிவோனே!

சிவானந்தலகரி - தமிழாக்கம்
கோவை கவியரசு நடேசக் கவுண்டர்

ஸ்ரீசந்திரசேகரபாரதி சுவாமிகள் ''அம்மையே! உனது திருவடிகளை பூசிக்க வேணுமென்ற ஆசைதான். ஆனால்

## நூல் மதிப்புரை

**நூல் பெயர் :** ***அன்னை மீனாட்சி அந்தாதி***

**நூலாசிரியர் :** **சொ.பொ. சொக்கலிங்கம்**

**வெளியீடு :** **பூம்புகார் பதிப்பகம்**
63, பிரகாசம் சாலை,
சென்னை - 600 108.

**விலை :** **ரூ. 12.50/-**

**பக்கம் :** **54.**

''ஸ்ரீதேவி மகாத்மியம்'', ''அபிராமி அந்தாதி'' ஆகிய அம்மன் புகழ் பாடும் நூல்களைப் பின்பற்றி மிகச் சிறந்த அம்பிகை பக்தரான கவிஞர் சொ.பொ. சொக்க லிங்கம் அவர்கள் அன்னை மீனாட்சி அந்தாதி நூலை மெய்யன்பர்களுக்குப் பயன்படும் பக்திப் பனுவலாகப் படைத்து வழங்கியுள்ளார்கள். இந்நூலில் 100 பாடல்கள் ஊன்உருகப் பாட வைப்பனவாய் உள்ளன. சான்றிற்கு ஒரு பாடல் காண்க :

''சோதியே நீ, சொக்கன் மனச் சுடரே நீ
சுந்தரத்தின் மந்திரம் நீ
ஆதியே நீ, ஆடவல்லாள் ஆடலும் நீ
ஆடலதன் அர்த்தம் நீ
பாதியே நீ பரமசிவன் படைப்பில் நீ
பல்சிறப்பின் சிகரம் நீ
ஓதுமடியார்தம் ''ஓம்'' எனும் மந்திரம் நீ
ஒப்பில்லா அம்பிகையே''

---

என் முன்வினைகள் என் மனத்தை வேறு பக்கம் இழுக்கின்றன. என்ன செய்வேன்?'' என்கிறார்.

என்றும் உன் பாதங்கள் பூஜிக்க : காண
எண்ணவே வேணுமென்ற இச்சைகள் பூண
முன்பு செய்தீவினைகள் என் மனதை ஈர்க்கும்
வேறுபால் வலுவினில் ஏதுநான் செய்வேன்?

என்கிறார்

★★★

நம் பாவங்கள் இறைவனையடைய முடியாது தடுக்கின்றன. பாவங்களை வெல்ல நாம் முயற்சிக்க வேண்டும். இறைவனுடைய திருவருளையே துணை யாகக் கொள்ள வேணும். மகாவீரனான இராமபிரான் தனக்குத் தானே துணையாக உள்ளவன் ***(தன் துணை ஒருவன் தன்னில் வேறிலான்)*** கூட சுக்ரீவனைத்துணை கொண்டு இராவணனை வென்றான். ***தானலால் துணையு மில்லை*** என்ற தன்மையுள்ள சிவபெருமானுக்கும் சிவகணங்கள் பக்கபலம் போலிருந்தன. காகங்கள் ஒரு கோடி நின்றாலும் ஒரு சிறு கல் எதிரில் நில்லாது பறந்து ஓடி விடுமே என்பர் தாயுமானவர். அதுபோல ஆகாய மளாவ அடுக்கிய விறகுக் குவியலும் சாம்பர் ஆக ஒரு சிறு தீப்பொறி போதுமே என்பர் அப்பர் பெருமான். சிறிது அருள் கிடைத்தாலும் வெற்றி கிடைக்கும் என்பது குறிப்பு. இறைவனது அருளுக்குக் கட்டுப்பட்டு கடல், கரையை மீறி வருவதில்லை. அருள் மூர்த்தியான பெருமான் கொடிய நஞ்சையும் அமுதாக ஏற்று உண்டு உலகைக் காத்தான். சகல உலகங்களையும் அழியாமல் காக்கும் இறைவன் மேருவை வில்லாக வளைத்தார். மேகங்கள் முதலானவற்றை இந்திரனைக் கொண்டு அடக்கி ஆளுகிறார். இராமபிரானின் அருள் கல்லைப் பெண்ணாக்க வில்லையா? **இறைவனருள் இருந்தால் எதுதான் நடக்காது எனக் கேட்கிறார் தாயுமானவர்.** இறைவனே! எனக்கு அடங்காத மனம் உன் அருள் இருந்தால் நிச்சயமாக அடங்கி விடும். உன் அருள் இல்லாவிட்டால் அடியேன் இருளில் தவிக்கிற மாதிரி துன்புறுவேன். எனவே எனைக் காக்க வேண்டியது உன் செயல் என்றார் இராமலிங்கர்.

என்ன நான் சொலி நிறுத்தினும் நில்லாது
ஏகுகின்றது இவ்வேழையேன் மனந்தான்
உன்னதின்னருள் ஒரு சிறிது உண்டேல்
ஒடுக்கி நிற்பனால் உண்மை; மற்றின்றேல்
இன்னதென்றறியா மன இருளில்
இடங்கொள் வேனன்றி என் செய்வன் சிவனே!
அன்னதுன் செயல் ஒற்றியூர் அரசே
அம்பலத்தினின்றாடல் செய் அமுதே.


எதையும் சாதிக்க இன்னருள் புரியும் அம்மை என் பாவங்களை நீக்குவது பெரிய காரியமில்லை. எனவே என் பாவங்கள் நீங்க நீயருள் புரிய வேணும் என வேண்டு கிறார் ஸ்ரீ ஜகத்குரு.

நின் முன்னை வினைப்பாவங்களை வெல்ல வேண்டின்
நீயே முயற்சி செய்வாய் என்பையாகில்
நின் கிருபை இடையின்றி நீ நல்குவாயேல்
நேர்மையாய் உறுதியாய் முயலுவேன் தாயே!

★★★

# ஓம் முருகா என்று சொன்னேன்

- செவ்வேள்



யாமிருக்கப் பயமேன் என்றான்
முருகன் நான் பயம்விட்டேன்
வேலும் மயிலும் துணை என்றான்
வேலன் நான் துணை கொண்டேன்
(யாமிருக்க)

உறுதி மனம் காண்பதற்கே
சோதனைகள் செய்வேன் என்றான்
''செய்க'' என்று நான் சொன்னேன்
வறுமையிலே தள்ளி விட்டான்
''ஓம் முருகா'' என்று சொன்னேன்
ஓடி வந்து தாங்கிக் கொண்டான்
(யாமிருக்க)

சந்நிதிக்கு வா என்றான்
வரும் வழியில் வனிதையரை
நடமாட வைத்து மனம்
சஞ்சலத்தில் வாட வைத்தான்
''ஓம் முருகா'' என்று சொன்னேன்
ஓடி வந்து கூட்டிச் சென்றான்
(யாமிருக்க)

வாழ்வதற்கு வடிவேலா!
வேலைதர வேண்டுமென்றேன்
வேதனைகள் கூட்டி வைத்தான்
வேலையவன் தரவில்லை
''ஓம் முருகா'' என்று சொன்னேன்
ஓடி வந்து வேல் கொடுத்தான்
வேல் எதற்கு? என்றனுக்கு
பார்காக்க அது உனக்கு
நான் கேட்ட வேலை முருகா
நலம் சேர்க்கும் வேலை என்றேன்.
ஓர் நொடியில் அவன் கொடுத்தான்
புகழோடு வாழ வைத்தான்
பொருளோடும் வாழ வைத்தான்
(சாமிருக்க)

★★★

# ஸ்ரீ துளசி கல்யாணம்

(துளசி சரிதம்)

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

தருமத்துவஜன் என்னும் மன்னனின் மனைவியான 'மாதவி' என்பவள், நூறு ஆண்டுகள் கர்ப்பமாக இருந்து, கார்த்திகை மாதப்பௌர்ணமியில், வெள்ளிக் கிழமை அன்று சுப முகூர்த்தத்தில் ஒரு பெண்ணைப் பெற்றாள். அந்தப் பெண், லக்ஷ்மி அம்சமாகையால், அழகான உருவ அமைப்புடன், கண்களுக்கு மிக ரம்மியமாக இருந்தாள். அவளுடைய அழகுக்கு ஈடு இணை சொல்ல முடியாததால், 'துளசி' என்று பெயரிட்டனர். 'துள' என்றால் 'ஈடு'; 'சி' என்றால் இல்லாதது என்று பொருள்.


அந்தப்பெண், ஸ்ரீமந்நாராயணரையே கணவராக அடைய வேண்டும் என்று நினைத்து, 'பத்ரிகர்' வனம் சென்று, தீவிரமாகப் பலகாலம் கடுந்தவம் புரிந்தாள். அதனால் பிரம்மதேவன், அவள் முன் தோன்றி, ''துளசி! உனக்கு நாராயண மூர்த்தியிடம் பக்திவேண்டுமா?, தாசத் தன்மை வேண்டுமா? அமரத் தன்மை வேண்டுமா?'' என்று கேட்டார். அதற்கு துளசியும், ''நான் கோலோகத்தில் கோபிகா பெண்ணாக விளங்கி, கிருஷ்ணனுக்குப் பிரியையாயும், தோழியாயும், லீலாவினோதியாகவும், நாயகியாகவும் இருந்தேன். அவருடைய சம்போகத்தில் திருப்தியடையாமல் மோகித்திருந்தேன். அப்போது ராதை, என்னை நோக்கி, 'நீ பூலோகத்தில் பெண்ணாகப் பிறப்பாயாக', என்று சபித்துவிட்டாள். கிருஷ்ணனும் என்னைப் பார்த்து, 'நீ பூலோகத்தில் தவமிருந்து பிரமனின் வரத்தால், என் அம்சமுடன், நான்கு கைகள் கொண்ட ஒருவனைக் கணவனாக அடைவாய்', என்று சொல்லி விட்டு மறைந்து போனார்,'' என்றாள்.

அதற்கு பிரம்ம தேவரும், ''துளசியே! முன்பு ஒரு சமயம், கிருஷ்ணரின் தேகத்திலிருந்து பிறந்த 'சுதர்மன்' என்ற கோபாலன் உன்னைப் போலவே உன்னைப் பார்த்து மோகித்து, அந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் சக்தியற்றவனாக இருந்தான். அப்போது ராதை அவனைப் பார்த்து வெகுண்டு, அவனையும் சபித்தாள். ஆகையால் பூவுலகில், மறுபிறப்பில் 'சங்கசூடன்' என்ற பெயருடன் பிறந்திருக்கிறான். அவனுக்கும் உன்னைப் போலவே, பூர்வ ஜென்ம வாசனை தெரியும்; நீ அவனை மணந்து பத்தினியாகி, பிறகு நாராயணரை நாயகராக அடைவாய்! மேலும் விருட்ச உருவமாகவும் பிறக்கப்போகிறாய். அப்போது, நீ எல்லா மதிப்புடையவளாகவும், விஷ்ணுவுக்கு உயிராகவும், பிரியையாகவும் இருக்கப் போகிறாய். நீ இல்லாமல் பூஜித்தால் தேவ பூஜைகள் அனைத்தும் பலனற்றதாகவே போய் விடும். நீ பிருந்தாவனத்தில் 'பிருந்தாவனி' என்ற பெயருடன் இருப்பாய்! கோபாலர்களும், கோபிகளும் உன்னைக் கொண்டே கிருஷ்ணனை வழிபட்டு பூஜிப்பார்கள். மரங்களின் இனத்திற்கு அதிஷ்டான உருவமான நீ, கிருஷ்ணனுடனேயே எப்போதும் கூடிமகிழ்வாய்'', என்று அருள் கூர்ந்து வரமளித்தார். மேலும் ராதையிடம் துளசிக்கு இருந்த பயத்தை நீக்க அவளுக்கு பதினாறு அக்ஷரமுள்ள 'ராதிகா மந்திரத்'தை உபதேசித்து, ''உனக்கும் கிருஷ்ணருக்கும் உள்ள நேசம் ராதைக்குத்தெரியாது, கிருஷ்ணருக்கு ராதையிடம் உள்ள அன்பும் பிரேமையும் உன் மீதும் இருக்கும்'', என்று சொல்லி விட்டு, அந்த மந்திரத்தையும் பூஜை முறைகளையும் உபதேசித்தார். அதன் பின் துளசியிடம், ''சங்கசூடனை மணந்து, சௌபாக்யவதியாக அவனுடன் கூடி மகிழ்வாயாக. வாழ்ந்த பிறகு, கோலோகத்தில் கிருஷ்ணரை அடைவாய், காலகதியில் சங்க சூடன் உலகை நீத்தபிறகு, வைகுண்டத்தில், நான்கு கரமுடைய நாராயணனை அடைவாய்'', என்றார்.

இதேபோல் சங்கசூடனுக்கும் பிரம்மதேவன் 'துளசியை மணக்கும்படியும், அவன் மனைவிக்கு பதிவிரதா பங்கம் நேரிடும்போது தான், அவனுக்கு மரணம்' என்ற வரமும் அளித்துச் சென்றார்.

பிரம்மன் சொல்லிச் சென்றபின், சங்கசூடன் துளசியை திருமணம் புரிந்தான். வானில் துந்துபிகள் முழங்கின! பூமாரியும் பொழிந்தன!!.... அரக்கர் குலத்தில் தோன்றிய 'சங்கசூடன்' என்ற 'சுதர்மன்' தன் ஜாதிக் கேற்றபடி பல அநீதிகளைச் செய்தான். மிக்க பலங் கொண்டவன் ஆதலால், இந்திராதி தேவர்களை போருக்கு அழைத்து வெற்றிபெற்றான். அதனால் அமரர்கள் பெருந்துன்பங்களுக்கு ஆளாகி, அனைவரும் ஒன்று கூடி, பிரம்மாவிடம் சென்று, இதைத் தெரிவித்தார்கள்.

மும்மூர்த்திகளுக்கும், சங்கசூடனுக்கும் போர் நடந்தது. சிவனாலும் அவனைவெல்ல முடியாது என்று உணர்ந்தனர். விஷ்ணுவானர் அந்தணர் வேடம் பூண்டு, அவன் கழுத்தில் உள்ள கிருஷ்ண கவசத்தை யாசகம் செய்தார். அப்பொழுதும் அவன் இறக்காததால், அவன் மனைவி கற்புள்ளவரை அவனை வெல்ல இயலாது என்பது பிரம்மாவின் வரம். அதனால் விஷ்ணு, துளசியின்



கணவர் உருவில் அவளிடம் சென்றார். அவளும் தன் கணவர் என்றே நினைத்துக் கூடியதில் கற்பை இழந்தாள். அருகில் சங்குசக்ர கதாபாணியாக இருக்கும் பகவானைக் கண்டாள். தன் கற்பு அழிந்து போனதில் விஷ்ணுவைப் பலவாறு பேசியபடி துயரப்பட்டாள்...!

அதற்கு விஷ்ணுவும், ''துளசி! நீ என்னை அடைய வேண்டும் என்றுதான் பலகாலம் தவம் செய்தாய். சங்க சூடனோ உன்னை அடைய தவஞ்செய்தான். அதனால் அவன் உன்னை மணந்து இன்ப வாழ்க்கை நடத்தினான். உன் தவத்தின் பலனை அடைய வேண்டிய காலம் வந்து விட்டதால், நானும் இப்போது உன்னிடம் வந்து விட்டேன். நீ இந்த உடலை நீத்து விட்டுத் திவ்விய வடிவமெடுத்து என்னுடன் ஆனந்தமாக இருக்கப் போகிறாய். உன்னுடைய உடல் பரதகண்டத்தில், 'கண்டகி' நதியாக மாறி, மனிதர்களைத் தூய்மைப்படுத்தும். உன்னுடைய ரோமங்களோ மரங்களில் சிறந்த 'துளசி' என்ற புண்ணிய விருட்சமாக மாறும். அவ்வாறு மாறிய துளசி விருட்சம் மூன்று உலகங்களிலும், கோவுலகிலும், விரஜா நதிக் கரையிலும், ராதா மண்டலம், பிருந்தாவனம், பாண் டீரம், சம்பகப்பூங்கா, சந்தனக்காடு, தாழை, முல்லை, மல்லிகை, மாதவி, மாலதி முதலிய தாவரங்கள் உள்ள இடங்களில் வளர்ந்து புண்ணியத்தோற்றமளிக்கும். துளசிச் செடி இருக்குமானால் அதனடியில் விஷ்ணுவும் மற்ற எல்லா தேவர்களும் வாசம் செய்கிறார்கள். அதனடியில் தங்கும் தண்ணீர் மிகவும் பரிசுத்தமான புண்ணிய நீராகக் கருதப்படுகிறது. அந்த நீரில் நீராடுபவர்களுக்கு சகல விதமான புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய நற்பலன் களெல்லாம் கிடைக்கும். துளசி மணிமாலையை அணிந்தவர்களும், துளசி நீரை அருந்துபவர்களும் லட்சம் அஸ்வமேதயாகங்கள் செய்த பலனை அடைவார்கள். துளசி மூன்று நாட்கள் பயன்படும். சிரார்த்ததினம், விரதம், பிரதிஷ்டை, தேவார்ச்சனை முதலிய சந்தர்ப்பங்களிலும் தானகாலங்களிலும் தூய்மையானதாகச் சொல்லப்படும். பூமியிலும், நீரிலும் ஏதாவது துளசி இலை விழுந்திருந்தாலும் கூட, அதை எடுத்து சுத்தம் செய்து உபயோகிக்கலாம். நீ, 'கண்ட கி' நதியாகவும் ஓடி, கடலரசனுக்குப்பத்தினியாக விளங்குவாய்; நீ என்னை 'கல்லாக' ஆகும்படி சபித்தாய். அதனால் நீ கண்டகி நதியாக மாறி ஓடப்போகும் அந்த நீரின் நதிக்கரையிலேயே நானும் 'கல்மலை'யாகப் போகிறேன். அக்கற்கள் கொடிய கிருமிகளால் துளைக்கப்பட்டு பல்வேறு வடிவங்களில் 'சாளக்கிராம'ங்களாகும். சாளக்கிராமங்கள் உற்பத்தியாகும் மலையில் கற்கள் ஒன்றோடொன்று கூடிப்புணர்ந்து லீலைகள் புரிந்துகொண்டிருக்கும். அவற்றின் அருகிலுள்ள கண்டகி நதியில் விழுங்கற்கள், சாளக்கிராமங்களாய்ப் பூஜைக்கும் பயன்படும். அவை சூரிய வெப்பத்தாலும் ஒளியாலும் 'பிங்கள' வர்ணமாகவும் பெரிதாகவும் மாறுகின்றன.

சங்கையும், துளசியையும், சாளக்கிராமத்தையும் ஒன்றாக வைத்து பூஜிப்பவன், மகா ஞானியாகவும், விஷ்ணுப்பிரியனாகவும் விளங்குவான். துளசியே! நம்மிரு வருக்கும் சாபத்தால் உண்டாகும் வடிவங்களால் உலகத்தவர்க்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகளைச் சொல்லிவிட்டேன்'', என்றார்.

இவ்வாறு மகாவிஷ்ணு கூறிக்கொண்டிருக்கும் போதே துளசி, தன்உடலை விட்டுவிட்டு திவ்ய தேகத்தோடு திருமாலின் திருமார்பில் வசிக்கும் வாழ்வு பெற்றாள். துளசிமாலையாக்கி அணிந்ததில் திருமால் 'துளசிதாமபூஷணர்' ஆனார்.

சங்க சூடனாகத்தோன்றிய நாராயணரும் தமது இருப்பிடம் சென்றார்.

'பிரகிருதி' தேவிகளின் பிரதான அம்சத்தில் தோன்றியவள் 'துளசி'!

இந்தக் கொடியகலியுகத்தில் மனிதர்களின் நன்மைக்காகவே பகவான்ஹரி, துளசியைப் பூஜிப்பதிலும், அதன் மகிமையைப்பற்றிப்பாடுவதிலும், அதைத் தியானம் செய்வதிலும், அதை மாடத்தில் வைத்து வளர்ப்பது போன்றவைகளால் சகலபாபங்களிலிருந்தும் விமோசனம் பெற்று 'சொர்க்க'லோகத்தை அடையலாம் என்ற எளிய வழியைக் காட்டியிருக்கிறார்.

மலர்களில், சிறந்தமலர் உருவினள்! சந்திரன், வெண்தாமரை, பால் ஆகியவற்றைப் போலப்பிரகாசிக்கும் சுத்தத்துவசொரூபியானவள்; துளசி இலையிலும், அதன் பூவிலும் சகலதர்மங்களும் நிலைபெற்று இருக்கின்

## தீயவர் தவறுகளை இறைவன் வேடிக்கை பார்க்கின்றானா?

அடியவர்கள் அல்லல் உறவும், அல்லாதவர்கள் பாவங்களை கூச்சமின்றி செய்து செல்வச்செழிப்பில் சுகபோகங்களை அனுபவித்துவருவதுமான உலகநடைமுறையினைக் கண்ணுறும்போது தீயவர் தவறுகளை இறைவன் வேடிக்கை பார்க்கின்றானா என எண்ணத் தோன்றும்.

நம் இனிய புதல்வர்களாகிய அடியார்களுக்கு அவ்வப்போது அல்லல்களை உணர்த்தித் தடுத் தாட்கொள்கின்ற இறைவன், தீயவர் திருந்தார் என்பதால் அவர்களின் தவறுகளைத் தட்டிக்கேளாமல், வேடிக்கை பார்க்கின்றான். எனினும் ஒருசேர அவர்களைத் தண்டித்துவிடுவான். இறைவன் நல்ல வர்களைச் சோதிப்பான். கைவிடமாட்டான். ஆனால் தீயவர்களை ஒரேயடியாக கைவிட்டுவிடுவான்.

இதனை விளக்கும் குமரகுருபரர் பாடல் காண்க.

'' தெய்வம் உளதென்பார் தீயசெயப்புகின்
தெய்வமே கண்நின்று நின்றொறுக்கும் - தெய்வம்
இலதென்பார்க் கில்லைத் தம் இன்புதல்வர்க் கன்றே
பலகாலும் சொல்வார் பயன்''

- நீதி நெறி விளக்கம்

றன. விஷ்ணுபகவான் துளசிதளத்தினால் சந்தோஷம் அடைவதுபோல் மற்ற பூக்கள் பழங்களினால் அவருக் குத்திருப்திஉண்டாவதில்லை; பகவான் ஹரியின் பாதங் களில் அர்ச்சித்த துளசி தளத்தை, எவனொருவன் தன் சிரசில் வைத்துக்கொள்கிறானோ, சகல பாபங்களிலிருந் தும் விடுபட்டு பரிசுத்தனாகிவிடுகிறான் என்று 'பத்ம புராணம்' கூறுகிறது.

துளசிவனத்தை வளர்ப்பவர்கள் நூறுபெரிய யாகங்கள் செய்தபலனை அடைவார்கள்.

துளசிவனத்தின் அருகில் இருந்து, மந்திரம் ஜபம் செய்வதால் பலகோடிமடங்கு பலன் கிடைக்கும்.

விஷ்ணுவுக்கு லட்சுமியிடம் எவ்வளவு பிரே மையோ அவ்வளவு பிரேமை துளசியிடமும் உள்ளது.

துளசியின் ஒரேஒருதளம் மட்டுமே நூறாயிரம் பொன்னுக்குச் சமானமானதாகும்.

கங்கை நீரைவிட, புஷ்கரதீர்த்தத்தைவிட சாதாரண துளசிதீர்த்தம் மிகவும் புனிதமானதாகும்.

மோட்ஷத்தை அளிக்கக்கூடிய பரமபவித்திரத் தன்மையான கங்கை எப்படி விளங்குகிறாளோ, அதே போல் துளசியும் பவித்திரத்தன்மையுடன் மோட்ஷமும் அளிக்கக்கூடியவள் ஆவாள்.

பூக்கள் இலைகள் யாவற்றிலும் துளசிஇலையே மிகவும் சிறந்தது. மனிதர்கள் வேண்டுவதையெல்லாம் அளிக்கக்கூடிய தெய்வீகசக்தி துளசியிடம் இருக்கிறது. துளசி மிகவும் பரிசுத்தமானது; பகவான் விஷ்ணுவுக்குப் பிரியமானதால் ''வைஷ்ணவி' என்றும் அழைக்கப்படு கிறது.

துளசி முதலில் பகவானிடம் பக்தியையும், பிறகு முக்தியையும் அளிக்கக்கூடியது.

துஷ்டதேவதைகள் எவையும் துளசியின் அரு கில் நெருங்குவதில்லை.

பாரததேசத்தில் முக்தியைவிரும்புவோர்க்கு முக்தியையும், போகத்தை விரும்புவோர்க்கு போகத்தை யும் வழங்கவல்ல 'கற்பக'விருட்சம் துளசி ஆகும்.

எவனொருவன் இறக்கும்தருவாயில் 'துளசி' என்று நினைக்கிறானோ அவனுக்கு நற்கதிகிடைக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

கோலோகவாசியான ஸ்ரீகிருஷ்ணரே துளசி யைப்பூஜித்து, லட்சுமியைப்போல் அவளுடன் சந்தோஷ மாக ரமிக்கிறார். அப்படிப்பட்ட துளசியை நாம் பூஜிப் பது என்பது மிகமிக விசேஷமானதாகும்.

சுமங்கலிகள் கணவனின் உத்திரவுபெற்றுக் கொண்டு துளசிபூஜையை ஆரம்பித்தல்வேண்டும். கன் னிப்பெண்கள், தன்தாயார் செய்யும் பூஜையுடன் சேர்ந்து செய்துவர, அதுவே தொடர்ந்து செய்யலாம்.

வீட்டில் சூரியஒளிபடும்படியான இடத்தில் சுத்தமான மண்ணைக்கொட்டி, நல்லநாளில், நல்லநேரத் தில் துளசிக்கன்றைவைத்து வளர்க்கவேண்டும். தொட்டி

யில் மண்ணைக்கொட்டியும், துளசிக்கன்றை வைத்து வளர்க்கலாம், சூரியஒளிபடவேண்டும் என்பது அவசியம். கருந்துளசிமிக விசேஷமானது. பூஜைக்காக வைத்த துளசியை, வேறொரு பூஜைக்கோ, அல்லது இதே துளசி பூஜைக்கோ 'பத்ரம்' எடுக்கக்கூடாது. (துளசிஇலைகளை) பெண்கள் துளசிபத்ரம் எடுக்கக்கூடாது. மேலும் 'துவாதசி'யில் துளசிபத்திரம் எடுக்கக்கூடாது. ஏனெனில் அதில் பழுத்த இலைகள் உதிரும்; உதிர்ந்தால் அது மிக்க பாபகரமானதாகும். அதனால் அன்று துளசியைத்தொடாமல் பழுத்த இலைகள் உதிராமல் துளசிபூஜை செய்ய வேண்டும்.

சுமங்கலிகள் தினமும் தலைக்கு நீராடவேண்டியதில்லை. மஞ்சள் கலந்த நீரை தலைக்குத்தெளித்துக் கொண்டால் போதும். ஆனால் கணவன் மனைவி தாம்பத்யஉறவுகொண்டால் தலைக்கு நீராடியபின்தான் துளசிபூஜை செய்யலாம். மாதவிடாய் சமயத்தில், துளசி செடியின் அருகில் செல்லக்கூடாது; செடிவாடிவிடும்.

நமக்கும் தெரியாமல் செடிவாடநேர்ந்தால். உடனே துளசிக்கன்றை புதியதாக வைத்துவிடவேண்டும். செழிப்பாக வளரும் வண்ணம் பாதுகாப்பது அவசியமாகும்.

தினமும் கோலமிட்டு, நீருற்றி, மஞ்சள் குங்குமம் வைத்து, பூவைத்து, அலங்கரித்து, பூஜித்து, ஏதாவது பழம், சர்க்கரை, வெல்லம், கற்கண்டு என்று நிவேதித்து, துளசிசுலோகம் சொல்லி, துளசிச்செடியின் நீரைஎடுத்து, தலையில் தெளித்துக்கொள்ள வேண்டும்.

மாதத்தில்வரும் இரண்டு துவாதசியில் பாயசம் செய்து நிவேதித்து, கன்னிப்பெண், பிரம்மச்சாரி என்று விநியோகிக்க, புத்திரபாக்யம் என்று புராணங்கள் கூறுகின்றன.

பிருந்தாவன, சிலுக துவாதசி அன்று ஸ்ரீதுளசி கல்யாணம் செய்யவேண்டும். அன்று பிள்ளையார் பூஜைமுதல் ஆரம்பித்து, சங்கல்பம், ஆசனம், கலசபூஜை, பிராணபிரதிஷ்டை, ஷோடசோபசாரபூஜை, அங்கபூஜை செய்து, ஸ்ரீகிருஷ்ணா அஷ்டோத்திரம், ஸ்ரீதுளசி அஷ்டோத்திரம், தூபம், தீபம், கற்பூரம், அர்க்யம் என்றும் மங்களஹாரத்தியுடன், தீபங்களுடன் ஹாரத்தி என்று, பாயசபாத்ரதானம் முடிய சிறப்பாக கிரமமாகச் செய்ய வேண்டும். அதனால் பூஜையை ஒரு ஆசார்ய அந்தணரைக்கொண்டு செய்து கொண்டால், அதில் ஏதாவது தவறிருந்தாலும், தோஷமில்லை என்பர். எந்தப்பூஜை யானாலும் நல்லது.

'துவாதசி' அன்றே புனர்பூஜையையும் செய்து விடலாம்.

'யந்மூலே' ஸர்வ தீர்த்தாநி யன்மத்யே ஸர்வதேவதா:
யதக்ரே ஸர்வேதாச்ச துள ஸீம்தாம் நமாம்யஹம்

இந்த துளசி தோத்திரத்தை தினமும் துளசி பூஜை செய்தபின், பன்னிரண்டுமுறை சொல்லிவர வைதவ்யம் வராது. மறுபிறப்பில் கணவனை இழக்கும் வண்ணம்நேராது.

'கல்யாணமா கார்த்திகையா' என்பார்கள்! ஆம்...! 'கல்யாணமும் கார்த்திகையும்' சேர்ந்துகொண்டுவரும் என்றால், அதுதான் கார்த்திகைமாதத்தில் பௌர்ணமியில் பிறந்த 'துளசி'யின் பிறந்தநாளாகும். கல்யாணம், ஐப்பசிமாதம் தீபாவளி அமாவாசை ஆன துவாதசியில் துளசியின் கல்யாணம் ஆகும். அன்றையதினம் 'சிலுக' துவாதசி என்றும், 'பிருந்தாவன' துவாதசி என்றும் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருக்கும். ஆம்! அன்று துளசிக்குக் கல்யாணம்!!

ஏகாதசி அன்று துளசிமாடம் உள்ளஇடத்தில் அல்லது, வீட்டில், கோலங்களால் அலங்கரித்த இடத்தில் துளசியை வைத்து, அம்மனைப்போல் அங்கரிக்க வேண்டும். அதில் நெல்லிமரம், பாரிஜாதமரம், வில்வமரம், அரசமரம் போன்ற கிளைகளைவைத்தால் மிகுந்த விசேஷமாகும். வாழைக்கன்று இரண்டுபக்கமும்கட்டி, மாவிலையால் துளசிமாடத்தைச் சுற்றி அலங்கரிக்கவும். கிருஷ்ண விக்கிரகம் இருந்தால் துளசிசெடியின் பக்கத்தில்வைதது அலங்கரிக்கவேண்டும். அல்லது கிருஷ்ணர் படம் இருந்தாலும் வைக்கலாம். வண்ணக்கோலங்கள் வரைந்து அலங்கரித்தல்வேண்டும். நாநாவிதவாசனை மலர்களாலும், ஊதுபத்தி போன்றவைகளாலும், வண்ண விளக்குகளாலும் சிறப்பாக அலங்கரித்து வைக்க வேண்டும். இரண்டுபக்கமும், மேலும்பலவிளக்குகள் ஏற்றி அலங்கரித்து 'பிருந்தாவனம்' போன்று காட்சியளிக்கும் வண்ணம் அலங்கரித்தல்வேண்டும். பட்டுஆடைகளாலும் அலங்கரிக்கவேண்டும்!

அன்று ஸ்ரீதுளசி அம்மனுக்கு திருக்கல்யாணம் ஆனதால், ஒரு சிறியபொட்டு தங்கத்தால் ஆன தாலி செய்து, துவாதசி அன்று நல்லநேரம் பார்த்து, அம்மனுக்குக்கட்டித் திருக்கல்யாணம் செய்யவேண்டும்.

அன்று, 'கல்யாணம்' ஆனதால், நெல்பொரி கொண்டு, வெல்லம் கலந்த பாகு உருண்டைகள் பதினான்குஜதை, கோபுரம், (பருப்புத்தேங்காய்) ஒருஜதையும் (பொரியினாலேயே) செய்து, பழங்கள், வெற்றிலை பாக்கு தாம்பூலாதிகளுடன் அதிரசம், அப்பம் போன்றவைகளால் நிவேதித்து பஞ்சபட்க்ஷபரமாணங்களுடன், திவ்யான்னங்களுடன், பாயசம், வடை என்று அமர்க்களமாகச்செய்து, அந்தணர்கள், உறவினர்கள், கன்னிப் பெண்கள் என்று சக்திக்குத்தக்கவாறு உணவளித்து மகிழ வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

★ ★ ★



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் புதிய கட்டிடத் திருப்பணிகள் திறப்புவிழா மற்றும் தொடக்க விழா மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திருமிகு ஐ. பெரியசாமி அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தொடங்கி வைக்க மிகச் சிறப்பாக நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியாளர் திருமிகு ஏ.எஸ். ஜீவரத்தினம், இ.ஆ.ப., பழநி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு த. பூவேந்தன் ஆகியோரும் பங்குபெற்று வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்கள். இவ்விழாவில் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திருமிகு கே.சி. பழநிசாமி அவர்கள், அறங்காவலர் பெருமக்கள் மற்றும் இணை ஆணையாளர் - நிர்வாக அதிகாரி திருமிகு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., அவர்கள் கலந்து கொண்டார்கள்.

 பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 99



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் புதிய கட்டிடத் திருப்பணிகள் திறப்புவிழா மற்றும் தொடக்க விழா மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திருமிகு ஐ. பெரியசாமி அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தொடங்கி வைக்க மிகச் சிறப்பாக நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியாளர் திருமிகு ஏ.எஸ். ஜீவரத்தினம், இ.ஆ.ப., பழநி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு த. பூவேந்தன் ஆகியோரும் பங்குபெற்று வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்கள். இவ்விழாவில் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திருமிகு கே.சி. பழநிசாமி அவர்கள், அறங்காவலர் பெருமக்கள் மற்றும் இணை ஆணையாளர் - நிர்வாக அதிகாரி திருமிகு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., அவர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.